விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 21 வியாழக்கிழமை (07.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 293

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் சிறந்து

முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்

# இடையூறுகளின்றி அரசியல் பணிகளை மேற்கொள்ள படையினர் உதவவேண்டும்

### மட்டு. அம்பாறை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தயாமோகன் கோரிக்கை

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ சூனியப் பிரதேசமான வவுணதீவு பிரதேச செயலகத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெற்றது.**

மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பிரதி தலைமைக் கண்காணிப்பாளர் ரோர் ஹோல்ம் தலைமையில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில், மட்டு-அம்பாறை மாவட்ட நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் தயா மோகன், அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், தலைமைச் செயலக இணைப்பாளர் மார்ஷல் ஆகியோரும்,

இராணுவத் தரப்பில் 23 ஆவது இராணுவப் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறி அமரதுங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேஸ் சமரதிவாகர, விசேட அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.கே. சிறிசேன மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். கீரகெல்ல ஆகியோர் கலந்துகொண்டனர்.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு சுமார் 2 மணி நேரம் வரை நீடித்தது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் நேற்றைய சந்திப்பு இடம் பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் ஆசியப் பிராந்தியத்திற்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

# அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்டால் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காக நேரிடும்

### இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்படை எச்சரிக்கை

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து மீன்பிடித்தால் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிடும் என இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் எச்சரித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களுக்குமே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறான கைது சம்பவங்களை எதிர்காலங்களில் இந்தியா பொறுத்துக் கொள்ளமாட்டாது எனத் தெரிவித்த மத்திய அரசு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டுமெனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திராவிட முன்னேற்ற கழகத் தலைவர் கருணாநிதியும் இந்திய பிரதமருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட 20 இந்திய மீனவர்களும் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எச். அப்துல்லா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது 5 படகோட்டிகள் தவிர ஏனைய 15 பேரையும் அவர் விடுதலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்புடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உலக ஒருங்கிணைப்பு மன்றத்தினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்ட்வரைபு குறித்து கலந்துரையாடப்பட்டது. இச் சந்திப்பின் போது மங்கள தடவள புண்ணிய தேரரும் உடனிருந்தார். மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளை சந்திப்பதற்கான முன்னேற்பாடாகவே இச் சந்திப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ச-08)

# புலிகள் - இராணுவம் வவுனியாவில் சந்திப்பு

(வவுனியா)

வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதியாக புதிதாகப் பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் தாரமே குலதுங்க தலைமையிலான குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமையிலான குழுவினருக்கும் இடையே நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பு வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களை அண்டிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்க்குடியமர்த்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களும் இராணுவமும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்

### யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களை இராணுவமும் இராணுவத்தைப் பொதுமக்களும் புரிந்துகொள்வதன் மூலமே இரு தரப்பினரிடையே எழும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணையத்தில் இணையப் பிரதிநிதிகளை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது யாழ். மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது, பண்ணைப் பாலத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை பின்னகர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பது போன்றன குறித்து நடவடிக்கை எடுப்பதாக தென்னக்கோன் உறுதியளித்துள்ளார்.

இதேவேளை சாவகச்சேரி நகரசபை மைதானத்தை இராணுவத்தினர் ஒப்படைக்கவேண்டும் எனவும் சாவகச்சேரிப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி பிரதேசத்தில் உள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் அனுமதிக்க வேண்டும் எனவும் அப் பகுதியில் உள்ள தென்னங்காணிகளுக்கு மக்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் இணையப் பிரதிநிதிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இச் சந்திப்பின்போது இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பாளர் ஆர்.கே.பி. ரணவீர, மேஜர் கல்ஜிணரட்ன, கப்ரின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-19)

# இலங்கையில் இருந்தவாறு ஜனநாயக வழியில் செயற்படுகிறேன்

### லண்டன் வானொலிக்கு கருணா பேட்டி

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலை புலிகள் கூறுவது போல் நான் எந்தவொரு நாட்டுக்கும் ஓடிப் போகவில்லை. இலங்கையில் இருந்துகொண்டு ஜனநாயகப் பாதையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறேன் என்று விடுதலை புலிகளால் விலக்கப்பட்ட கருணா, லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எனது சகோதரர் றெஜி புலிகளால் கொல்லப்பட்ட சம்பவம் உண்மைதான். இதற்காக நான் எனது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறிய கருணா எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

(ம-06)

# யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் அனைத்தையும் பதிவு செய்யுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பொது அமைப்புக்களும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என யாழ. மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது விடயம் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், விடுதலைப் போராட்டத்திற்காகத் தமிழினம் பெறுமதி மிக்க உயிர்களைத் தியாகம் செய்துள்ளது. தென்னிலங்கையில் இனவெறி ஆட்சியாளர் களால்தமிழினம் தொடர்ந்தும் ஒடுக்கு முறைக்கு உளளாகி வருகிறது. போர் அனர்த்தங்களினால் எமது மக்களும், பல பொது நிறுவனங்களும் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். இதற்காக யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புகள் யாவும் ஓரணியில் திரண்டு தமது பலத்தை வெளிப்படுத்த வேண்டுமென்பது காலத்தின தேவை. ஆதலால யாழ். மாவட்டத்தில் இயங்கி வருகின்ற அனைத்து பொது அமைப்புக்களும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின ஒன்றியத் தில் தமது அமைப்பை பதிவு செய்ய வேண்டும்.

நேற்று முதல் ஆரம்பமான இப்பதிவுகள் எதிர்வரும் 20ஆம் திகதி வரைமேற்கொள்ளப்படும். எனவே, இக்காலப் பகுதியில் உரிய அமைப்புக்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்.

இல 595, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மேற்படி ஒன்றியத்தின் அலுவலகத்தில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம மாலை 4.00 மணி வரை இதற்குரிய விண்ணப்பப்படிவங் களைப பெற்று பதிவை மேற்கொண்டு பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவும்.

இதற்கமைய மத அமைப்புக்கள், பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள், தொழிற்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள், முச்சக்கர வண்டி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள், வர்த்தக சங்கங்கள், சிகை அலங்கரிபபாளர் சங்கங்கள், வெண்மை வாணப சங்கங்கள், விடுதி உரிமையாளர் சங்கங்கள், காணாமல் போனோர் சங்கம், கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், விவசாய சம்மேளனங்கள், ஊழியர் நலன்புரிச் சங்கங்கள், ஆலய தர்மகர்த்தா சபை, பரிபாலனை சபை, விளையாட்டுக் கழகங்கள், சாரணிய சங்கங்கள், மாணவர் ஒன்றியங்கள், சமாதான நீதிவான் சங்கம்,இடமபெயர்ந்தோர் நலன்புரிச் சங்கங்கள் மற்றும் சட்டத்தரணிகள் சங்கம் என்பன இந்தப் பதிவுகளை மேற்கொள்ளத் தகுதியுடையன.

எனினும்,இதில் பெயர் குறிப்பிடப்படாத அமைப்புக்கள் இங்கு இயங்கினால் அவற்றை எமது கவனத்திறகு தந்து பதிவை மேற்கொள்ளவும். அமைப்புக்கள் அனைத்தும் தனித்தனியாக தங்கள் பதிவை மேற்கொள்ள வேண்டும் என யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம கேட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)



யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கும் யாழ்.மாவட்ட பொது அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படம். (படம் :- சிவசங்கர்)

## பொதுமக்கள் விசனம்

(கைதடி)

தென்மராட்சிப் பகுதிக்கான மின்சார விநியோகத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கைதடி கிராமத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கும் நுணாவில், மட்டுவில் சாவகச்சேரி பிரதேசங்களுக்கும் மின் விநியோகம் ஆரம்பித்து வைக்கபபட்டது.

கைதடி கிராமத்தின் எஞ்சிய பகுதிகள் அப்போது மின்சாரம் வழங்கலில் முற்றாகப் புறக்கணிககப்பட்டிருந்தன. இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் கடந்த 5 மாதங்களாக நடைபெற்று வந்த நிலையில் மின் மாற்றிகளும் பொருத்தப்பட்டன. ஆனால், இன்று வரை அப்புகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் உள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரிதும் விசனம் தெரிவிககின்றனர். (ரு-26)

# ஆசிரியர் தின நிகழ்வுக் காட்சிகள்



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில், அதிபர், ஆசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.





யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய ஆரம்பக்கல்லூரி அதிபர் சிவநேசனின் துணைவியார் ஆசிரியர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் இதில் கலந்துகொண்ட ஆசிரியர்கள், மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் சிவசங்கர்)

## வீதி புனரமைப்பிற்கு நிதி ஒதுக்கீடு

(ஊர்காவற்றுறை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் நாரந்தனை வடக்கு உதராப்பிட்டி விவசாய வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ் வீதி புனரமைப்புக்காக இலங்கை சமுர்த்தி அதிகார சபை இரண்டு லட்சத்து இருபத்திஐயாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ப-75)

## மிதிவெடிகள் அழிப்பு

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், மல்லாகம் போன்ற பிரதேசங்களில் 191 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை குப்பிளானில் உள்ள வெடிபொருட்களை அழிக்கும் குழியில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டன.

(ப-106)

# தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் தரம்-5 புலமைபரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் விபரம் வருமாறு:

### செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

க.ஜெனிதா-128, அ.அனந்தா-125

### வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம

ப.திலக்சனா-141 ,ச.கோவர்த்தன்-139, ஜெ.யாழரசி-135,ப.சுந்தரநடராசன்-126, இ.ஹம்சிதா- 125

### சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

ப. பவதாரணி - 131

### இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

வ. ஷந்தனா- 164 த மிளா-158, ஞா.கஜகர்ணி -154, ஒ.கே.ரணி - 151, ப. பிரசாந்தினி - 145,சி. ரூபிகா - 145, ந.சாருஜா - 143,ப.பவித்திரா - 142, தி. கிருஷா- 142,க.மதுரா- 142, ஜெ.ஜானகி - 142, க.டர்சிகா - 141, சி.வினோதிகா - 140 ,ச.கம்சிகா -139, ஜெ.ஜெசீபா - 137,க. விதுசிகா - 136, ஸ்ரீ. துளசிகா - 135,சு. கனுசா -133, ச. துஷாரகா- 133, த.அருந்தஷா -133, நி.நிவேதா - 132, க. மாதங்கி -131, கி.கோசலா - 130,சு. சுபஸ்திகா -130, அ. பிறிம்சி - 130,ர. துளசிகா - 129, வ.தர்சினி -128,சு.கானப்பிரியா - 128, மா. கஜலக்சி - 128, பா. லக்சிதா-127, இ.பிரியதாரணி-127, ஜெ. கஸ்தூரி 127,ம.சாகித்தியா-125, வ.இலக் சனா-125, க.தயானா- 125, சி.நிலானி- 124.

### ஜோன் பொஸ்கோ

ரூ.அனற்ரூபிஷா-175, ச.சிவனீபன் -169. அ.ஆன்அபிநயா-165, அ.ஆராஅமுதன் -164,ம.பரசுராம் -163,ப.மகிதனன் -161,கு.கஜானன் -160, கி. சுபாங்கன்-159, யோ.சாம்பவி-159, ப.மாதுமை-159,தி.மயூரசாகித்தியன்-157, மு.மாதங்கி-153, க.அர்ச்சிதா-153, சி.மதுஷாந்-152, கௌ.அகில்ராஜ்-152, த.கஜீதன் -152, சி.தர்சன்- 151,சி. மேகலாதன் -150, கா.ரகுபரன்- 150, ஜெ.நீக்.கிளஸ்-149, ஜெ.ஜனனிப்போறா-148, சி.சிவராம்-147, ந.கௌஷினா -148,அ.ஒஸ்ரின்-146,அ.தமியா-145, க.சுதாகர் -144,செ.பிரம்மிகா-142, ஸ்ரீ.சாத்வீகன் - 142, உ.நிலுக்ஜா-142, ப.வினுசிக்கா-140, இ.கீர்த்தனன்,139, செ.ஆன்றிரோஷினி- 139, கு.வைஷ்ணவி -138, மோ.திவாகரன் - 138து.ஆதவன் - 138, றொ.மோனிஷா-138, வி.பைரவி-137,வி.கஜானன்-137,ஞா. றொமிப்ரவீன -137,சி.சாம்பவி - 137, செ. கஜானன் -136, கி. டிவன்சியாந்-136, ஸ்ரீ.ஸ்ரீமேனுஜா-136,ச. நிரோஷினி - 136, செ. மேருஜா - 134, ச. வைஷ்ணவி-134, தி.சங்கவி-133, கு.சிறபரன்-133,ஜீ.ஜிந்துஷா-131,ஸ்ரீ. சாம்பவி- 130, புருக்ஷிகா-130, செ. குகறேசன்-130, அ.சர்மினி-129, பூ. நிஷாந்தினி- 129,சு.சதுர்ணாதேவி - 128, ஜொ.எ.டோ.றொஷேல்- 128, தி. தேவகாந்-127, இ.கஜானன்-127, ஜெ. கோகுலவாணன் -127,ஜோ.சங்கீதன்-127, சொ.துளசிகன் -127, சி.பிரதீப் - 127, இ. கீத்தா-127, தேனுகா-126, ஸ்ரீ.சமித்யா-126, டொ.அ.ஜெரின்சியா-126, வி.வைஷ்யா-126, ந.விதுஷன்- 126, ம. எழினி -125, ஸ்ரீ.லிங்கப் பிரசாத்- 125, ஜெ.அபிநயா-125, தே.வித்தியா-125, ப. அபிராம்-125, கு.சஜீவன்- 125, சி. கார்த்தியானி - 124, பா.நிருசா-124., ந.கிருத்திகன்-138.

(ற)

## விவாத அரங்கு - 6

விடயம்

மதுமாற்றத் தடைச் சட்டம் தேவையானதா? தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# தனக்குத் தானே வெடிவைத்து வவுனியாவில் இளைஞன் தற்கொலை

(வவுனியா)

வவுனியா சா ம்பைக்குளம் பகுதியில் னக்கு தானே வெடி வைத்து இளைஞர் ஒருவர் தற் கொலைசெய்து செ ண்டுள்ளார்.

நேற்றுமுன் தி ம் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஜெ சிங்கம் ஜெயகாந்தன் என்ற இ உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞனின் மனைவி வெளிநாட்டில் இருப்பதாகவும் மனைவி பணம் அனுப்புகின்ற போது ஒவ்வொருநாளும் குடித்து விட்டு வீட்டுக்கு வந்து தாயாரு டன் தகராறு புாிவதாகவும் தெரிய வருகிறது.

சம்பவ தினத்தன்றும் அவ் வாறு குடித்துவிட்டு வீட்டுக்கு வந்த இளைஞனுக்கு தாயார் ஏசியுள்ளார். ஆத்திரம் அடைந்த இளஞன் வீட்டில் இருந்த இடியன் துப்பாக்கியை எடுத்து தனக்குத் தானே வெடிவைத்துள் ளார். இதன் காரணமாகவே அவர் இறந்ததாகத் தெரிவிக் கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மாவட்ட நீதவான் மா.இளஞ் செழியன் விசாரணைகளை மேற் கொண்டார். இந்த சம்பவம் தொடர்பாகத் தாயாரிடமும் சம்பவ இடத்திற்கு உடன் சென்ற இருவரிடமும் வாக்கு மூலம் பதியப்பட்டுள்ளது.

இது தற்கொலை என்று ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்த போதும் இடியன் துப்பாக்கியை ாசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட் டுள்ளார்.

இதேவேளை, பிரஸ்தாப இளை ஞனின் தங்கையின் கணவர் 9 மாதத்திற்கு முன்னர் விலங் குக்கு வைத்த பொறியில் சிக்கி மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## ஆசிரியர் தினத்தை ஒட்டிய பொதுஅறிவுப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

உலக ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையால் ஆசிரி யர்களுக்கிடையே நடாத்தப் பட்ட பொதுஅறிவுப் போட்டி முடிவுகள வெளியாகியுள்ளன.

அந்த வகையில்,

1ஆம் இடத்தை - கொடிகா மம் திருநாவுக்கரசு ம வி யாலய ஆசிரியர் ருமதி தே.பஞ்சாட்சரமும், 2ஆம் இடத்தை - சந்திரபுர ஸ்கந்தவரோதய வித்தியாலய ஆசிரியர் யு.யுகேஸ் அவர்களும், 3ஆம் இடத்தைக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி ச.இரவிராஜ் அவர்க ளும் பெறுகின்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக கல்லூரியில் நடைபெற்ற ஆசிரிய தினவிழா நிகழ்வில் வழங்கப்பட்டன. (ப-127)



காரைநகர் களபூமி விளானை சனசமூகநிலையத்தின் 29ஆவது ஆண்டு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்டத்துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் உரையாற்றுவதையும் சனசமூக நிலைய முன்னாள் தலைவர் அ.சிற்றம்பலத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலர் கணேசலிங்கம் பொன்னாடை போர்த்தக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

## ஊர்காவற்றுறையில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் சந்தையொன்று அமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள மெலிஞ்சி முனையில் சமுர்த்தித் திட்டத் தின் கீழ் பொதுச்சந்தையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் இவ் நாளாந்த சந்தை அமைக்கப் பட்டுள்ளது.

இச்சந்தையின் மூலம் மெலி ஞ்சி முனை கரம்பன் மேற்கு கிராம மக்கள் நன்மையடை வார்கள் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (ப-75)

# கோதுமை மாவுக்கு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

சந்தையில் மாவின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்.மாவட்ட விவ சாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசம் கோதுமை மா விற்பனை குறித்த விலை நிர்ணயத்தை அறிவித்துள்ளது.

பாவனையாளர்களின் நன்மை கருதி யாழ்.மாவட்டத் தில் உள்ள அனைத்துப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களும் தங்கள் கிளை நிலை யங்களில் உள்ள பச்சை நிறத் திலான வியாபாரக்குறி கோதுமை மா சில்லறை விலையாக கிலோ ஒன்று 23.50 சதமாகவும், சிவப்பு நிறத்தினாலான வியாபாரக் குறியுள்ள கோதுமை மா சில் லறை விலையாக கிலோ ஒன்று 27 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும்.

இதற்கமைவாக தேவையான அளவு மாவைத் தம்மிடம் பெற்றுக கொள்ளலாம் எனவும் அடுத்து வரும் தலைவர், பொதுமுகாமை யாளர் மாநாட்டில் விலை தீர் மானிகம் வரை மேற்குறிப்பிட்ட விலை நடைமுறையில் இருக்கு மெனவும் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின சமாசத் தலைவர் ப.கனகலிங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சாரதி அனுமதிப்பத்திர விவகாரம் பௌத்த துறவி வழக்குத் தாக்கல்

பௌத்த துறவிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவ தில்லையென்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரின் தீர்மானத்தை எதிர்த்து பௌத்த பிக்கு ஒருவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சாக்கிய முன்னி பறகொட விமலவன்ஸ என்ற பௌத்தபிக் குவே இந்த வழக்கை தாக்கல் செய் துள்ளார். பௌத்தசாசன சபையின் தீர்மானப்படி மோட்டார் போக்குவரத் துத திணைக்கள ஆணையாளர் மேற்கொண்ட தீர்மானம பிழையா னது என்று மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். (ற-8)

# நில ஒதுக்கீட்டில் 27 ஆயிரம் கோடி ஊழல் பாரதிய ஜனதாக் கட்சி அரசுமீது குற்றச்சாட்டு


தெஹல்கா ஆயுதபேர ஊழ லையடுத்து முந்திய பா.ஜ.க. ஆட்சியில் சங்பரிவார் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினருக்கு நில ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் கள் பற்றியும் மத்திய அமைச்சு விசாரணை நடத்தவுள்ளது.

வாஜ்பாய் ஆட்சியின் போது அரசு நிலத்தை ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட சங்பரிவார் அமைப் புகளுக்கு முறைகேடாக ஒதுக்கீடு செய்தது குறித்தும் விசாரணை நடத்த மன்மோகன் சிங் அரசு உத் தரவிட்டுள்ளது.1999 முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒதுக்கீடு செய் யப்பட்ட இந்த நிலங்களின் மதிப்பு 27 ஆயிரம் கோடி ரூபா ஆகும்.

முன்னாள் மத்திய அமைச்சர், டில்லியைச் சேர்ந்த மற்றொரு பா. ஜ.க.தலைவர் ஆகியோரும் முறை கேடாக நிலம் பெற்றவர்களில் அடங்குவர்.

மதத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான ஆயிரம் பங்களாக்கள் இடிக்கப்பட்டு அந்த நிலங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டதனாலேயே தற்போது டில்லி யில் அரசு நிலங்களுக்குத் தட்டுப் பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து இந்த ஒதுக் கீடுகள் பற்றி விசாரணை நடத்து மாறு மத்திய அரசு உத்தரவிட் டுள்ளது. (து)



நவராத்திரி பண்டிகையையொட்டி பூம்புகார் நிறுவனம் அண்ணாசாலையில் உள்ள விற்பனை மையத்தில் கொலு பொம்மை கண்காட்சி ஒன்றை நடாத்தியது. இதனை ஊரகத தொழில்துறை அமைச்சர் பா.வளர்மதி திறந்து வைத்தார். முதல் விற்பனையை தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச் சிக் கழகத் தலைவர் ரவிச்சந்திரன் தொடக்கி வைத்தார்.




தபால் துறையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா ஞாபகார்த்த தபால்தலையை குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் வெளியிட்டார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் மன்மோகன் சிங்கும் உடன் உள்ளார்.

# இந்தியச் செய்திகள்

## கல்லூரிப் பேராசிரியர் கடத்திச் செல்லப்பட்டு மிரட்டல்

கல்லூரிப் பேராசிரியர் ஒரு வர் கடத்திச்சென்று மிரட்டப் பட்ட வழக்கில் சி.பி.ஐ.விசா ரித்து அறிக்கை தாக்கல் செய் யச் சென்னை உயர் நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மாநிலக் கல்லூ ரிப் பேராசிரியர் இராஜேந்திரன் என்பவர் அவரது சொந்த ஊரான மயிலாடுதுறையில் தேக்கு மரங்கள் கடத்தப்படுவதாகக் கூறிய புகாரையடுத்து அந்த ஊர்க் கோட்டாச்சியர் கருணாகரன் தன்னைக் கடத்திச்சென்று மிரட்டியதாக உயர்நீதிமன்றத் தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த வழக்கை விசா ரித்த சி.பி.ஐ.பொலிஸார் தம்மை மிரட்டுவதாக இராஜேந்திரன் புகார் கூறியதையடுத்து இவ் வழக்கை சி.பி.ஐ.விசாரித்து 3 மாதங்களுக்கிடையில் அறிக்கை சமர்ப்பிக்க நீதிபதி கற்பக விநாயகம் உத்தரவிட்டார். (து)

## ரஷ்ய நிறுவனத்திடம் 50 கோடி இலஞ்சம் தமிழக அரசு அதிகாரிகள் கோரியதாக புகார்

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் தங்களுக்கு வழங்கவில்லையென்று ரஷ்ய நிறுவனமொன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

சென்னை நகரில் குடிநீர்த் தேவைக்காகக் கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டத்துக்கான ஒப்பந் தத்தைப் பெறுவதற்காக 50 கோடி ரூபா இலஞ்சம் கொடுக்க மறுத்த தால் அந்த ஒப்பந்தம் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவிசாரணைக்கு வந்தபோது ரஷ்ய நிறுவனத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அதிகாரிகள் ஒப்பந்தம் கோரு வதற்கு முன்பு ரஷ்ய அதிகாரிகள குழுவொன்று தமிழக அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியதாகக் குறிப்பிட்டார்.

கடல்நீரைக் குடிநீராக்கும் போது மின் உற்பத்தி செய் வதறகு அனுமதியளித்தால் 1000 மில்லியன் தொன் நிலக்கரியை இலவசமாக வழங்குவதற்கு ஆயத்தமாக இருப்பதாக ரஷ்ய நிறுவன அதிகாரிகள் தெரிவித் ததாகக் கூறினார்.

இதற்குப் பிறகும் தமிழக அரசு அந்த ஒப்பந்தத்தைத் தங்களுக்கு வழங்கவில்லை யெனறு ரஷ்ய நிறுவன வழக் கறிஞர் தெரிவித்தார். மனுமீதான விசாரணை தொடர்ந்து நடை பெறுகிறது. (து)

# ஈராக்கில் தொடர்ந்தும் வன்முறைகள்

# கார்க்குண்டுவெடிப்பு, மோதல்களில் 47 பேர் உயிரிழப்பு; 130 பேர் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சக்தி வாய்ந்த இரு கார்க்குண்டுகள் வெடிப்பு மற்றும் மோதல்களில் 47பேர் உயிரிழந்ததுடன், 130 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அரச அலுவலகங்கள், அமெரிக்கத் தூதரகம் மற்றும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களும், பத்திரிகையாளர்களும் தங்கியுள்ள ஹோட்டல்கள் ஆகியவை அமைந்துள்ள பாதுகாப்பு மிகுந்த பகுதியில் இக் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

பாக்தாத்தின் மேற்கு நுழைவாயில் பகுதியில் ஒரு கார்க்குண்டை கலகக்காரர்கள் வெடிக்கச் செய்தனர். இதில் 18பேர் இறநதனர். 85பேர் காயமடைந்தனர். இதற்கு ஒரு மணிநேரம் கழித்து,ஹோட்டல்கள் நிறைந்த பகுதியில் இருந்து புறப்பட்ட சிவிலியன் பாதுகாப்பு அமைப்பின் வாகன அணியைக் குறி வைத்து ஒரு கார்க்குண்டு வெடித்தது. இதில் 9பேர் கொல்லப்பட்டனர். 15பேர் காயமடைந்தனர்.

இது இவ்வாறிருக்க அமெரிக்க இராணுவத்தினருக்கும், முஸ்லிம் சமயத் தலைவர் முக்தாதா அல்-சாதரை ஆதரிக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சாதர் நகரில் உக்கிர சண்டைகள் நடைபெறுகிறது. இதில் 20பேர் கொல்லப்பட்டதாகவும் 30பேர் காயமடைந்துள்ளதாகவும் கிளர்ச்சியாளர்களின் அல்-மஹ்தி படையின் செய்தித் தொடர்பாளர் அபுதார் அல்-கினானி கூறினார்.

ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தலில் முக்தாதாஅல்-சதாரை பங்கேற்காமல் தடுக்கும் நோக்கில், முக்தாதாஅல்-சாதரின் இயக்கத்தின் மீது அமெரிக்க இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ப)

## சீனாவில் வெடிவிபத்து 54 பேர்பலி 28 பேர்காயம்

சனாவில் பட்டாசுத் தொழிற்சாலை ஒன்றில் ஏறபட்ட பயங்கர வெடிவிபத்தில் 54பேர் பரிதாபமாக பலியானதுடன், 28 பேர் படுகாயமடைநதனர்.

சீனாவின் தென்மேற்கில் உள்ள கவுங்சி பகுதியில் ஆறு பட்டாசு தயாரிக்கும் தொழிற சாலைகள் உள்ளன. அவற்றில் அண்மையில் பெரும் வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த வெடிவிபத்தில் தொழிற்சாலைக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வெடித்துச் சிதறின. சிதறிய பாகங்கள் சம்பவ இடத்திலிருந்து நான்கு கிலோ மீற்றா தூரத்திற்கு அப்பால் வரை கிடந்தன. வெடிச் சத்தம் 10கிலோ மீற்றர் வரை கேட்டது.சீனாவின் கிராமப்புறங்களில் உரிய அங்ககாரம் இல்லாமலும், பாதுகாப்பற்ற முறையிலும நிறைய பட்டாசுத் தொழிற் சாலைகள் செயல் பட்டு வருகின்றன. அவைகளில் ஏற்படும் வெடி விபத்துக்களினால் ஆண்டு தோறும நூற்றுக்கணக் கானோர் பலியாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## கலிபோர்னியாவில் இந்துக் கோயிலா அமெரிக்கர்கள் கடும் எதிர்ப்பு

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணதில் இந்துக் கோயில் கட்டும் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதனால், அப் பகுதி மக்களிடையே ஒரு இணக்கமற்ற நிலைமை காணப்படுகிறது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தின் தென் பகுதியில் உள்ள சைனோ ஹில்சில் இந்துக்கள் அதிகம் வசித்து வருகின்றனர். அவர்கள் அங்கு பிரமாண்டமான இந்துக் கோயில் மற்றும் கலாசார மையத்தைக் கட்டுவதற்குத் திட்டமிட்டனர்.

ஆனால் இப் பகுதியில் கோயில் கட்டினால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படும், போக்குவரத்து நெரிசல் மற்றும் தேவையில்லாத சர்ச்சைகள் ஏற்படும் என்று உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், கோயில் கட்டும் திட்டத்திற்குத் தடை விதிக்கக் கோரி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர். இதற்கமைய மேற்படி நகரத்தில் நிர்ணயிக்கப்பட்ட உயரத்தை மீறி கோயில் மற்றும் பெரிய அளவில் கோபுரம் கட்டக் கூடாது என்று நீதிமன்றமும் தீர்ப்பளித்து விட்டது.

இதனால், கோயில் கட்டத் திட்டமிட்டிருநதவர்களுக்கு பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதா அல்லது நான்கு வருடங்களாக போட்டு வந்த திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதா என்று குழப்பம் அடைந்துள்ளனர் அமெரிக்கா வாழ் இந்துக்கள். (ப)

WORLD NEWS
உலக தரிசனம்

## ஆபத்தான கடல் அலைகள்!



மிகப பெரிய கப்பல்களைக் கூட கடல் அலைகள காணாமல் போகச் செய்து விடும். ஆபத்தான நிகழ்வுகள் உலகில் நடந்து கொண்டே இருக்கின்றன. எனவே,மிகப் பெரிய அலைகள் எந்தக் கடலில் தோன்றும்? எப்பொழுது தோன்றும்? உலகில் மிகவும் ஆபத்தான கடல் எது? என விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர்.

காற்று, கடல் அலைகளை உண்டாக்குவதில் பெரும் பங்கேற்கின்றது. கடற்பரப்பின் மேல் காற்று வீசும் போது கடல் நீரில் ஏற்படும் அசைவுகள் அலைகள் எனப்படும்.

சிற்றலைகள், பெரு அலைகள், மூழ்கும் அலைகள், காற்றால் உண்டாகும் காற்றலைகள், இயல்பான பெருங்காற்றால் அல்லது புயலால் தோன்றும் அலைகள், கடல் அடியில் புவி அதிர்ச்சியால் தோன்றும் புவி அதிர்ச்சி அலைகள், புவியீர்ப்பு விசையால் எழும் ஓத அலைகள் என அலைகள் பல வகைப்படுகின்றன.

இதுவரை கடல் அலைகளினால் 200 மீட்டர் நீளமுள்ள பெரிய சரக்குக் கப்பல்கள் இருநூறுக்கும் மேற்பட்டவை காணாமல் போயுள்ளன.

கடலில் ஏற்படும் மிகப்பெரிய அலைகளைக் குறித்து ஐரோப்பிய செயற்கைக் கோள் கண்காணித்து வருகின்றது. 1000 ஆண்டுகளுக்கு ஒருமுறை மிகப் பெரிய மலைபோன்ற அளவு அலை தோன்றும் என்ற கணிப்பை சமீபகால நிகழ்வுகள் பொய்யாக்கி விட்டன.

செயற்கைக்கோள்கள், அலைகளைக் குறித்து அனுப்பும் படங்கள் "வேவ் அட்லஸ்" எனப்படுகின்றது. இது உலகில் அனைத்துக் கடல்களில் ஏற்படும் அலைகளை படங்களாக அனுப்பி வருகின்றது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் உலகின் எல்லாப் பக்கமும் இருந்து எழும் அலைகள் ஆராயப்பட்டு எந்தக் கடல் மிகவும் ஆபத்தான கடல்? என்பது அறிவிக்கப்பட்டு விடும். (ப)

## இஸ்ரேல் இராணுவ பலத்தின் மூலம் பலஸ்தீனத்தை பணியவைக்க முயல்கிறது

### இது முட்டாள் தனமான முயற்சி என்கிறார் யசீர்அரபாத்



யாசர் அராபத்

காஸா முனைப் பகுதியில் பதுங்கியிருக்கும் பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேலிய இராணுவத்தினரிடம் ஒரு போதும் சரணடையமாட்டார்கள் என பலஸ்தீன இயக்கத்தின் தலைவர் யசீர்அரபாத் உறுதியுடன் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன மக்களை அடிபணிய வைக்கும் நோக்கில் இஸ்ரேல் காஸா பகுதிகளில் உள்ள பலஸ்தீன மக்களின் வாழ்விடங்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இவ்வாறான இஸ்ரேலியப் படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்களில் அப்பாவிப பொது மக்களே அதிகம் கொல்லப பட்டுள்ளனர்.

எனினும் இஸ்ரேல் தனது இராணுவ பலத்தினால் பலஸ்தீன மக்களை பணிய வைக்க நினைப்பது முட்டாள்தனம்.

இஸ்ரேல் தனது இராணுவ பலத்தினைக் கொண்டு பலஸ்தீன மக்கள்ள கொன்று குவிப்பதன மூலம் பலஸ்தீன இயக்கத்தையும் அதன் போராளிகளையும் மிரட்ட முனைகிறது. ஆனால் நாம் இவற்றுக்கு அஞ்சி சரணடைய மாடடோம். மாறாக எமது கொள்கையில் உறுதியுடன் இருந்து இறுதிவரை போராடுவோம எனவும தெரிவித்தார்.

இதேவேளை காஸா முனைப பகுதியில் உள்ள அகதி முகாம்கள் மீது கடந்தவாரம் இஸ்ரேல் படைகள் நடத்திய பீரங்கித் தாக்குதலில் நூற்றுககணக்கான அபபாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

## கறிவேப்பிலையை வெறுப்பவர்களுக்கு

உணவில் கறிவேப்பிலை இருந்தால் கீழே எடுத்துப் போட்டுவிட்டுச் சாப்பிடும் பழக்கம் இருந்தால், உடனடியாக மாற்றிக் கொள்வது நல்லது.

தெற்காசிய சமையல் என்பது நாக்கு ருசிக்காக மட்டுமல்ல... உடல்நலத்தையும் சார்ந்தே அமைந்துள்ளது என்பதை மேற்கத்திய நாடுகள் ஒவ்வொன்றாய் ஒப்புக் கொண்டு வருகின்றன. சர்வதேச அளவில் பெரும் பிரச்சினையாகிவரும் சர்க்கரை நோய், புற்று நோயைத் தடுக்கும் சக்தி கறிவேப்பிலைக்கு உள்ளது என்று லண்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வெளிநாட்டவர் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்ற எண்ணம் பெரும்பாலான வர்களிடம் உள்ளது. எமது வாழ்க்கை முறை ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு வகையில் உடல், மனம் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளன.

குறிப்பாகச் சமையலில் சேர்க்கப்படும் பொருட்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மருத்துவக் குணம் நிறைந்தவை. கடுகு, மிளகு, இஞ்சி, பூண்டு, கொத்தமல்லி, கறிவேப்பிலை போன்றவை உடல்நலத்துக்கு எவ்வளவோ நன்மைகளைத் தருகின்றன.

இவற்றில் கறிவேப்பிலையின் மருத்துவ குணம் பற்றி லண்டனில் உள்ள 'கிங்ஸ்' கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். எம் முதியோர்கள் ஏற்கனவே கூறிச் சென்ற கருத்தையே அவர்களும் உண்மை என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

நீரிழிவுநோய், புற்றுநோய்க்கு மாற்று மருந்துகளாக கறிவேப்பிலையைப் பயன்படுத்தினால் பலன் கிடைக்கும் என்பதே அவர்கள் கண்டுபிடிப்பு. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதை கறிவேப்பிலை கட்டுப்படுத்துகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இது குறித்து ஆராய்ச்சிக் குழுத் தலைவர் பேராசிரியர் பீட்டர் ஹக்டோன் கூறியதாவது;

தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளில் புற்றுநோயைக் கட்டுப்படுத்த கறிவேப்பிலையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். கறிவேப்பிலையில் இருந்து பிழிந்தெடுக்கப்பட்ட சாறு மூலம் பாரம்பரிய மருந்து தயாரிக்கப்படுகிறது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிலருக்கு அதை கொடுத்து பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. நுரையீரல் புற்றுநோய் கலன்களை அந்த மருந்து அழிப்பது தெரிய வந்தது.

மூன்று ஆண்டுகள் தொடர்ந்து கறிவேப்பிலை பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதன்மூலம் நீரிழிவுநோய், புற்றுநோய்க்கு மாற்று மருந்துகளை கறிவேப்பிலை மூலம் தயாரிக்கமுடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், இந்நோயில் பாதிக்கப்பட்டவர்கள், கறிவேப்பிலைச் சாறை நேரடியாகச் சாப்பிடக்கூடாது. ஆனால் கறிவேப்பிலை இலையை தினமும் உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டால், இரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தமுடியும். அதற்கு முன் அவர்கள் டாக்டர்களிடம் ஆலோசனை நடத்த வேண்டும் இவ்வாறு பேராசிரியர் பீட்டர் ஹக்டோன் கூறினார். (ப)



முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் கதாநாயகியாக நடித்த "பரைடு அண்டு பிரிஜுடிஸ்" என்ற ஆங்கிலத் திரைப் படத்தின் வெள்ளோட்ட விழா லண்டனில் மிக கோலாகலமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஐஸ்வர்யாராய் இப் படத்தின் கதாநாயகனாக நடித்த ஹொலிவூட் நடிகர் மார்டின் ஹெண்டர்சனுடன் பேசி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# கட்சியின் கொள்கைகளை மீறியமைக்காக ஸகீர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் அங்குராார்ப் பணம் செய்துவைக்கப்பட்ட தேசிய ஆலோசனை சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தமது கட்சி எவரையும் நியமிக்கவில் லையெனவும் இதில் கலந்து கொண்ட கட்சியின் பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.ஸகீர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

கட்சியின் செயலாளர் ஹசன் அலி இதுவிடயம் குறித்து அறிக்கை யொன்றை விடுத்துள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில், தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்திற்கு சட்டத்தரணி என்.எம்.ஸகீர் அழைக் கப்பட்டமையானது, கட்சிக்குத் தெரியாமலேயே இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் எவரையாவது அக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்திருந்தால் அது கண்டனத்திற்குரிய விடயமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்று முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே தீர்மானித்துள்ளது. முஸ்லிம் மக்கள் சமாதானப பேச்சுவார்த்தைகளில் தனித் தரப்பாக கலந்துகொள்ள வேண்டுமென்ற கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்மானத்தை வெளிப்படுத்தாதவரை ஜனாதிபதியின் தேசிய ஆலோசனை சபையில் கலந்துகொள்வதில்லையென்று ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸின் கொள்கைகளை மீறி தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டததில் கலந்துகொண்ட ஸகீர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (ந-8)

# தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தோர் பொலனறுவையில் கப்பம் வசூலிப்பு

பொலனறுவை மாவட்டத் திலுள்ள தமிழ், முஸ்லிம் கிராமங் களில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்கள் விவசாயிகளிடமும், வியாபாரிகளிடமும் கப்பம் கோரி வருவதாகத் தகவல்கள வெளியாகியுள்ளன.

கர்பாலா, முத்துக்கல், சொறிவில், சேனபுர, கட்டுவன்வில், குடாபொக குன ஆகிய கிராமங்களிலுள்ள விவசாயிகளிடமும் வியாபாரிகளிடமுமே இவ்வாறு கப்பம் கோரப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட நபர்கள் தங்களை தமிழ்க் குழு என அடையாளப்படுத்திக் கொண்டு வீடுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் சென்று கப்பம் கோரி கடிதங்களை கொடுத துள்ளனர்.

அத்துடன் இக் குழுவினரால் வாகனங்களும் அபகரிக்கப்பட்டு வருவதாக மற்றுமொரு தகவலும் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான தகவல்களை தமக்கு அறியத் தருமாறு வெலிகந்தை மற்றும் பொலனறுவை பொலிஸார் அப்பகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது குறித்த விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ந)

# உலக அறிவியலுக்கு முகம்கொடுத்து வாழ தமிழ்ச் சமூகம் முன்வர வேண்டும்

## அருள் மாஸ்டர் எடுத்துரைப்பு

(கொக்கட்டிச்சோலை)

கல்வயிலே தொய்வு ஏற்படாது உலக அறிவியலுக்கு முகம் கொடுத்து எமது சமூகம் வாழ வேண்டும். எமது விடுதலைப் போராட்டத்திலே கல்வி மிகவும் முக்கியமானது.

இவ்வாறு தமிழீழ கல்வி மேம் பாட்டுப் பேரவை துணைப் பொறுப் பாளர் அருள் மாஸ்டர் தெரிவித் தார்.

நேற்று முன்தினம் கொக்கட் டிச்சோலை மாவட்டச் செயலகத் தில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு வலயப் பாடசாலை அதிபாகளுக்கான ஒன்று கூடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டு. அம்பாறை மாவட்ட கல் விப் பிரிவுப் பொறுப்பாளர் விமல் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது விடுதலைப் போராட்டத் தில் சகல விடயங்களிலும் சம நிலையான கட்டமைப்புக்கள் மக் கள் மயப்படுத்த வேணடும். போராட்ட காலத்திலே பல இன்னல்களின் மத்தியில் 1992ஆம் ஆண்டு கல் விப் பேரவையை எமது தேசியத் தலைவர் உருவாக்கினார். கிழக் கிலே பல்வேறுபட்ட குறைபாடு டைய பாடசாலைகளை இனம் கண்டு பல கோடி ரூபா செலவில் சிரான் நிறுவனமூடாக அவை அபிவிருத்தி செய்யப்பட்டன.

அந்த நிதியை குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திலோ அல்லது வலயத் திலோ பயன்படுத்தப்படாமல் பல பாகங்களிலும் பயன்படுத்த வழி வகை செய்தோம். இன்று வடக்குக் கிழக்கு மாகாணத்திலே ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக எமது மாணவர்கள கல்வியை இழக்கின்றார் கள். அதேநேரம் சிங்களப் பாடசாலை களிலே மேலதிகமான ஆசிரியர் கள் கற்பிக்கின்றார்கள். அங்கு பல வசதிகள் காணப்படுகின்றன.

இன்றுவரை எமது மாகாணத் திலே சில பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இல்லாமல் இயங்கு கின்றன. பாடசாலைகளின் தேவை களை நிவிர்த்தி செய்ய வேண் டும. தேவைகள் எதுவென்று ஆராய வேண்டும். பொது அறிவு ரீதியாக எமது பாடசாலைகளில் ஏற்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அதிபர்கள் அயராது பாடுபட வேண் டும்.

தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் மாணவர்கள் கூடுதலான அறிவைப் பெற முயற் சிக்க வேணடும். எமது சமுதாயத் தில் சிறந்ததொரு சந்ததியினரை உருவாக்க அதிபர்கள் அனைவரும் பாடுபட வேண்டும் எனவும் குறிப் பிட்டார். (ந)

## பொன்விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் தனது 50ஆவது ஆண்டை முன்னிட்டு பொன்விழா மலர் ஒன்றை வெளி யிட்டுள்ளது.

ஆலயத்தின் முகப்புத்தோற்றம், கழகப் பணிமனையின் முகப்புத் தோற்றம் ஆகியவற்றின் வெளித் தோற்றத்துடன் காணப்படும் இப் பொன்விழா மலர் சைவ சமய மக்கள் பயனடையும் வகையில பல கட்டுரைகளை தாங்கிய வண் ணம வெளிவந்துள்ளது. அத்துடன், [illegible]ம்மல[illegible] ஆலயமுகப்புத் தோற்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கழக நிர்வாகசபையினர், கழகச் செயற்பாடுகள் பற்றிய பல வர் ணப் புகைப்படங்களும் அச்சிடப் பட்டுள்ளன.

மேலும் பேராசிரியர் இ.குமார வடிவேல் எழுதிய 'கல்வியின் நோக்கம் என்னும் கட்டுரையில் இன்றைய கல்விநிலை பற்றியும், மாணவர்கள் ஆசிரியர்கள், பெற் றோர்கள எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் விரிவாக விளக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ந)

விளையாட்டு டிப்ளோமா பயிற்சியில் சித்தியடைந்த

## யாழ்.மாவட்ட அலுவலர்கள் 6 பேருக்கு இன்று கொழும்பில் பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம)

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட விளையாட்டு டிப்ளோமா பயிற்சி நெறியில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த 6 விளையாட்டு அலுவலர்கள் சித்தி யடைந்துள்ளனர்.

செ.சதீஸ்குமார் (சாவகச்சேரி), க.விஜதரன் (நெடுநதீவு), சி.ரமணன் (யாழ்ப்பாணம்), செ.மகிந்தன் (நல்லூர்), பா.பாஸ்கரன் (உடுவில்) பா.முகுந்தன் (மருதங்கேணி) ஆகியோரே இப் பயிற்சிநெறியில் சித் தியடைந்துள்ளனர்.

இவர்கள் இன்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தேசிய விளை யாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# தேசிய ஆலோசனை சபை ஓர் பக்கச்சார்பான அமைப்பே

## ஹேமகுமார நாணயக்கார சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவினால் முன்மொழியப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக் கபபட்ட தேசிய ஆலோசனை சபை ஒரு பக்கச் சார்பான அமைப்பு என ஐககிய தேசியக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் அங்குரார்ப் பணம் செய்துவைக்கப்பட்ட தேசிய ஆலோசனைசபை கூடியபோதும் அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வில்லை. ஒரு தரப்பினரை மட்டும் கொண்ட தேசிய ஆலோசனை சபையால் நாட்டிற்கு எதுவித பயனு மில்லை.

இந்தக் கூட்டத்தில் பௌத்த தேரர்களும் கத்தோலிக்கக் குரு மார்களும் கலந்துகொண்டனர். இவர்கள் மாற்றுக் கருத்துக்களை கொண்டவர்களாவர்.

அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இணைந்து சமா தானப் பேச்சுவார்த்தைகளை ஆரம் பித்த பின்னர், ஐக்கிய தேசியக் கடசியும் இந்த ஆலோசனை சபை யில் இணையத் தயாராக இருக் கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

## வலிகாமம் பிரதேச ஓய்வூதியர்கள் கவனத்திற்கு

ஓய்வூதியர்களுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற போதும் சிலருக்கு அது இன்னமும் வழங்கப்படவில்லை.

பிரதேச செயலகங்களினால் ஓய்வூதியம் குறித்த மீளாய்வுகளுக் காக அனுப்பிவைக்கப்பட்ட படிவங்களில் ஓய்வூதியர் ஓய்வுபெறும் பொழுது தாம் பெற்ற அடிப்படிச்சம்பளத்தை குறிப்பிடத் தவறியதனா லேயே புதிய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் அவர்களுக்கான கொடுப் பனவுகள் கிடைக்கவில்லை.


இது தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களைத் தன்னுடன் தொடர்புகொள் ளும்படி வலிவடக்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் ஈ.சி.விஜய ராஜசிங்கம் கேட்டுள்ளார். (து)

# 22 இலட்சம் பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

பெருமளவான ஹெரோயின் போதைப் பொருளை விழுங்கிய நிலையில் இலங்கைக்குள் அவற் றைக் கடத்திவர முற்பட்ட பாகிஸ் தான் பிரஜை ஒருவரை கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பகுதி அதிகாரி கள் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பிரஸ்தாப நபர் நீர்கொழும்பு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு வயிற் றோட்டத்திற்கான மருந்து கொடுக் கப்பட்டு குறிப்பிட்ட 79வில்லை கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட ஹெரோயினின் பெறுமதி சுமார் 22 இலட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. (ந-8)





பாண்டிச்சேரியில் நடைபெற்ற 9வது உலகத் தமிழப் பண்பாட்டு இயக்க மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தென்கச்சி கோ.சுவாமி நாதனுடன் (மத்தியில் நிற்பவர்) இலங்கை கிளையின் இணைச் செயலாளர் சிவ.ஆறுமுகசாமி, தலைவர் ஆ.சண்முகலிங்கம் ஆகியோரையும் இதில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பேராளர்களையும் படங்களில் காணலாம்.



அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 21இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடம் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினத்தால் அண்மையில் திறந்து வைக் கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ப.அருளானந்தம் ,சி.நந்தகுமார் மற்றும் மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி பா.ரகுநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த)
## மாதிரிப் பரீட்சை - 2004
## General Certificate of Examination (Ord.Level)
## Model Examination - 2004
# English Part II

Time: 2 hour Prepared- Mrs. A. Kiruvaratnam
J/ Mallakam M. V.

**VIII.** Write a short description about "Your favourite game" by answering the following qus. Write complete sentences.

1) What's your favourite game?

2) Why do you select it?

3) How much time do you spend to play it?

4) How often do you play it?

5) With whom do you play?

**IX.** You wish to open a saving Account in your school bank. Fill in the application form given below.

1) Name of bank:-..................................................

2) Full name:-..........................................................

3) Date of birth:-......................................................

Age:-......... Year:-..........Month:-......... Days:-........

4) Address:-............................................................

5) Telephone No:-....................................................

6) Name of guardian / parent:-.................................

7) School identity card No:-.....................................

..................... ..............................

Date Signature

**X.** In each sentence there are two blanks. Select the correct word for blank (a) from box A and blank (b) from box B. The 1st one is done for you.

1) Do not allow children to (a)...play...............
(b)...Cricket.........on the road.

2) In order to prevent tooth decay (a)...................
(b)........... immediately after every meal.

3) To improve your knowledge and to (a)................
(b) ...........read newspapers daily.

4) If you are over weight do not (a)..................
(b)...................... and oil too much.


5) When you enter a place of worship
(a)................. (b).........................

**A**
- Brush
- Observe
- Collect
- Play
- Dump
- Consume

**B**
- Litter
- Silence
- Information
- Teeth
- Cricket
- Sugar

**XI.** Using the information given in the bar chart, which summaries the results of the survey, write a report on different modes of travel of children. Write about 10 -12 sentences. You may use the following words and phrases.

Most, few, a few, a good number, some




**XII.** Read the following text and answer the questions given below.

Many organism have become extinct during the time of earth's existence. Usually, extinction is a natural process that may or not occur over a long period of time. Dinosaurs are probably the most notable extinct animals.

Today however, most endangered species have become endangered as the result of the activities of human beings. Hu mans kill animals for their fur, tusks and endangered animals are now protected by laws but poachers, people who hunt illegally, disobey the laws and kill and trap thousands of endangered species yearly.

The African elephants is an example of animal that is endangered because of poaching. Poachers illegally kill the ele phants for their ivory tusks. It is estimated that in the last ten years. The African elephant population has been slashed from one million to only Five hundred thousand.

Besides the demand for products like ivory, another cause for the increasing number of endangered extinct species is destruction of the places where organisms live. As the human population increases, so dose the need for places for hum...to live and farm. The areas where plants and animals live are cleared to make room for housing, industry, roads and farming. when land is cleared most of the plants are killed and the animals that cannot escape die.

1) What animal is mentioned in the text that faces problems to survive?..................................

2)Why dose man kill animals? ..........................................

3) Write down the sentence which tells man needs more land to satisfy his needs?...............................................

4) Find words in the text which have the same meaning as the following .............(a) hunter..................(b)reduce...........................

5) What is the total elephant population roughly estima... in Africa today........................................

க.பொ.த (சா/த) மாணவர்களே!
வலம்புரியில் தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள் வெளிவரும்
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# க.பொ.த (சாதாரணம்) மாதிரிப் பரீட்சை 2004

# கணிதம் I

நேரம்: 1மணி


ஆக்கம் தி. இ. நவரத்தினம்
ஓய்வு பெற்ற உதவி அதிபர்.

01.ஒரு கிலோ சீனியின் விலை ரூபா 43.50 எனின் ரூபா 217.50க்கு எத்தனை கிலோ சீனி வாங்கலாம்?

02.சுருக்குக :- $(\frac{3}{4} + \frac{1}{3})$இன் $1\frac{1}{3}$

03. சுருக்குக :- $\frac{4}{a-b} - \frac{2}{b-a}$


04.




முக்கோணி ABCயில் பக்கம் BC ஆனது Dவரை நீட்டப்பட்டுள்ளது. AB = AC எனின், $A\hat{C}D$ யின் அளவு யாது?

05. 4மனிதர்கள் ஒரு வேலையை 12 நாட்களில் செய்துமுடிப்பார்கள். 3 மனிதர்கள் அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

06. தரப்பட்ட உருவில் AB சமாந்தரம் CD ஆகும். $B\hat{A}E=130^0$, $D\hat{C}E = 120^0$ எனின் x ஐக் காண்க.




07.தீர்க்க :- 3(x-2)+2 = 8


08. $\frac{1}{V} + \frac{1}{U} = \frac{1}{F}$ எனும் சமன்பாட்டில் V = 6, U = 3 எனின் Fஐக் காண்க.

09.கூட்டுக :-

1101 இரண்டு
1011 இரண்டு

10. 0.08 ஐ சதவீதமாகத் தருக.

11.




தரப்பட்ட உருவில் AB என்பது விட்டமாகும். C என்பது பரிதியில் உள்ள யாதும் ஒரு புள்ளியாகும். $\hat{A}BC = 60^0$ எனின் $B\hat{A}C$யின் அளவு யாது?.

12.[illegible]km/h கதியில் செல்லக்கூடிய வாகனம் 1800Km தூரத்தை எத்தனை மணித்தியாலத்தில் கடக்கும்?

13.y = 4x+3 என்ற நேர்கோட்டுக்குச் சமாந்தரமாகவும் (0,5) என்னும் புள்ளிக்கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டினைத் தருக.

14.ஒரு ஒழுங்கான பல்கோணியின் அகக்கோணத்திற்குப் புறக்கோணம் 3:1 என்ற விகிதத்தில் உள்ளது.

(i) ஒரு புறக்கோணத்தின் அளவு யாது?
(ii) பக்கங்களின் எண்ணிக்கை யாது?

15. $X+\frac{1}{X}=3$ எனின் $X^2+\frac{1}{X^2}$ இன் பெறுமதி யாது?


16.ஒரு டசின் தோடம்பழங்கள் ரூபா 120க்கு வாங்கி ஒரு பழம் 12 ரூபாய்ப்படி விற்றால் மொத்தலாபம் என்ன?

17. 6,7,9,10,x,15 என்னும் புள்ளிகளின் இடை 10 எனின் x இன் பெறுமதி யாது?

18. $x^2+10x$ என்னும் கோவையை நிறைவர்க்கமாக்குவதற்கு கூட்டப்படவேண்டிய எண் உறுப்பு யாது?

19. $-2 \leq x \leq 3$ என்னும் சமனிலியை எண்கோட்டில் காட்டுக.

20.




தரப்பட்ட உருவில் 0 என்பது வட்டத்தின் மையம். AB என்பது நாண். C என்பது பரிதியில் உள்ள ஒரு புள்ளி. $0\hat{A}B = 50^0$ எனின, $A\hat{C}B$யின அளவைக் காண்க.


21.145 அமெரிக்கன் டொலரை இலங்கை நாணயத்தில் மாற்றும் போது 13,775ரூபா கிடைத்தது. ஒரு டொலரின் பெறுமதி இலங்கை நாணயத்தில் எவ்வளவு?.

22. $\sqrt{3} = 1.73$ எனின் பின்வருவனவற்றின் பெறுமதி யாது?
(i) $\sqrt{48}$ (ii) $\sqrt{75}$

23. சுருக்குக : $\frac{\text{மட } 16}{\text{மட } 2}$


24. சைன்θ $=\frac{6}{10}$ எனின் பின்வருவனவற்றைக் காண்க.
(i) கோசைθ (ii) தான்θ

25




தரப்பட்ட வென்வரிப் படத்தில் பின்வருவனவற்றைக் காண்க.
(i) (AUB)'
(ii) (A∩B)

26. தரப்பட்ட உருவில் DE // BC , AD =5 cm DB = 4cm, AE = 4cm EC= xcm x ஐக் காண்க.




27.ஒருவன் 10ரூபாப் பங்குகளை 12ரூபாப்படி வாங்க 1200 ரூபாவை செலவு செய்தான்.
(i)அவன் வாங்கிய பங்குகள் எத்தனை?
(ii)பங்குகளின் பெயர்மாத்திரையான பெறுமானம் யாது?

28. 3x =4y எனின் x :y இனைக் காண்க.

29. 2500 ரூபா விலை குறிக்கப்பட்ட பொருள் ஒன்று விற்பனையின் போது 15% கழிவுடன் விற்கப்படுகிறது. விற்ற விலையாது?

30. $4^{x-1} = 2^x \times 8$ x ஐக் காண்க.

**நாளை கணித வினாத்தாள் பகுதி II வெளிவரும்.**

## ம.உ.ஆ.கு வின் முயற்சியினால் எச்.என்.டி.சி சான்றிதழ்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முயற்சியினால் கடந்த 1998ஆம் ஆண்டு நடைபெற்ற உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் இச் சான்றிதழ் வழங்கப்படாததால் மேற்படி மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.

இது விடயம் தொடர்பாக பல தடவைகள் உயர் அதிகாரிகள் பலருடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்திய போதும், இது குறிதது எவ்வித நடவடிக்கையும் ஏடுக்கப்படவில்லை.

இந்நிலையில், இது தொடர்பாக கரவெட்டியைச் சேர்ந்த வே.நாகேந்திரன் கடந்த யூன் மாதம் 16ஆம் திகதி யாழ். மனித உரிமைகள் ஆணைககுழுவில் செய்த முறைப்பாடடை அடுத்து மனித உரிமை ஆணைக்குழுவினது முயற்சியினால் வே. நாகேந்திரததிற்கும், அவருடன் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

## சாட்சியாளர்களைப் பாதுகாக்க சட்டங்கள் பலப்படுத்தப்படவேண்டும்

**புதிய பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டு**

(கொழும்பு)

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சாட்சியாளாகளைப் பாதுகாப்பதற்கு தற்போதைய சட்டஙகள பலப்படுத்தபபட வேண்டியது அவசியமென பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே குற்றவியல் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது நெருக்கடிகள் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுக்காலை நடைபெறற வைபவத்திலேயே பொலிஸ் மா அதிபர் இக் கருத்துக்களை வெளியிட்டார்.

சாட்சியாளர்களைப் பாதுகாப்பதற்கு செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியது அவசியம் எனவும் பொலிஸ் மா அதிபர் கூறினார்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட புதிய பொலிஸ்மா அதிபரை பாதுகாப்பு உயர் அதிகாரிகள் மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோர் வரவேற்றனர். பொலிஸ் மா அதிபருக்கு கடற்படையினரின் விஷேட அணிவகுபபு மரியாதையும் இங்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# இறைச்சிகளுக்கு இரையாகாமல் இருப்போம்

மனிதர்கள் உட்கொள்ளும் உணவுவகைகள் மூலம் மனிதர் களுக்கு நோய் பரவும் வாய்ப்பு சுகாதார கவனமின்மையால் அதிகமுள்ளது. சைவ உணவு, அசைவ உணவு என உணவுவகைகளை இரண்டு வகைகளாக மனிதர்கள் பிரித்து உற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக அசைவ வகை உணவுகள் என்பதில் ஆடு, மாடு,பன்றி,பறவையினங்கள் போன்ற வற்றை மனிதர்கள் உற்கொண்டு வருகின்றனர். இந்த மாமிச வகை உணவுவகைகளின் மாடு, பன்றி, ஆகியவற்றின் இரசசிகளால் மனிதனுக்குப் பரவும் நோய் பற்றியும் அந்த நோய் மனிதனைப் பாதிக்காமல் எவ் வகையில் மாமிசங்களைப் பதப்படுத்தி சமைத்து சாப்பிடவேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டால் அந்தநத நோய்கள் வராமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

மனிதர்கள் உட்கொள்ளும் மாமிசங்கள் (இறச்சிகள்) மூலம் பரவும் நோய்களையும் அதைத் தடுக்கும முறைகளையும் தெரிந்து கொள்வது உயர் ஆபத்துக்களில் தப்பிக்க உதவுகிறது.

### மாட்டிறைச்சி நாடாப்புழு நோய்

டீனியா சேஜி னேட்டா (Taenia saginata) என்ற நாடாப்புழுவால் ஏற்படும் முக்கிய நோய்களில் ஒன்றாகும். இந்த நடாப்புழு மனிதனின சிறுகுடல் பகுதியில் தங்கி வாழ்கிறது. இப் புழுவின் வளர் பருவத்தில் ஒன்றான லார்வா மாட்டின் உடலுக்குள் சென்று தசையில் தங்கிவிடுகிறது. இத்தகைய மாமிசத்தை பச்சை யாகவோ சரிவரச் சமைக்காமலோ உண்ணும் போது இந்த நோய் மனிதனுக்குப் பரவுகிறது.

மாட்டில் இந்நோய் 30-80 சத வீதம் வரையுள்ளது. முக்கியமாக மாட்டில் மட்டும் இருக்கும் இந்நோய் நாடாப்புழுகளின் முட்டைகள் நிறைந்த புள்வெளியில் மேய்வது மூலம் வருகிறது. மனிதனின் மலம் மூலம் இந்நோய் புல் தரைக்குச் செல்கிறது. மனித கழிவுநீர் காயும் இடங்களில் இந்நோய் அதிகஅளவு இருக்கும்.

### நோய்பரவும் முறை

மனிதனுக்கு இந்நோய், நோயால் பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சியை வேகவைக்காமல் அல்லது அரை அவியலோடு உண்பதால் ஏற்படுவதாகும்.

சரியான சுகாதார முறையை பின்பற்ற வில்லையெனின் மனிதனில் இருந்து வெளியேறும் முட்டை மீண்டும் வாய் வழியாக குடற்பகுதிக்குச் சென்று மனிதனின் மூளையைப் பாதிக்கிறது.

வயிற்றுப்போக்கு, குடல் அடைப்பான், குடல் ஒவ்வாமை, உடல்மெலிதல் சோர்வு போன்ற நோய் அறிகுறிகள் தென்படும்.

இந்த நாடாப்புழுவின் லார்வா மூளைப்பகுதிக்குச் சென்று விட்டால் வலிப்பு போன்ற நரம்பு சம்பந்தமான நோய் குணங்கள் தென்படும்.

### தடுப்பு முறைகள்

1. மனிதர்கள் கண்ட இடங்களில் மலம்கழிக்கக்கூடாது.
2. மாட்டிறைச்சியை நன்கு வேகவைத்து சாப்பிடவேண்டும்.
3. சாக்கடை நீரை நன்கு பதப்படுத்திய பிறகே புல்தீவன வளர்ப்புக்குப்புக்கு பயன்படுத்தவேண்டும்.

### பன்றி இறைச்சி நாடாப் புழு

இந்நோயும் (Taenia so libo na) என்ற நாடாப்புழுவால் ஏற்படும் நோயாகும். இந் நோயை ஏற்படுத்தும் நாடாப்புழுவும் மனிதர்களின் குடல் பகுதியில் காணப்படுகிறது. பன்றியின் இயக்குத் தசையில் இக் குழுவின் குஞ்சுகள் புழுக் கட்டிகளாக உள்ளன. இந்நோய் உலகம் முழுவதும் உள்ளது. எங்கெல்லாம் பன்றி இறைச்சியை நன்கு வேகவைக்காமல் உண்ணும் பழக்கமுள்ளதோ அங்கெல்லாம் இந்நோய் உள்ளது.

மோசமான பொருளாதார நிலையில் வாழ்ந்து வரும் மக்க ளிடையே இது அதிக அளவில் இருக்கிறது.

### நோய் பரவும் முறை

பன்றி இறைச்சியை நன்றாக வேக வைக்காமல் உண்பதாலேயே வருகிறது.

மேலும் மனிதனின் மலம் பன்றிக்கு கிடைப்பதன் மூலமும் பரவுகிறது.

நாடாப்புழு வளரும் இடத்தைப் பொறுத்தது,

குடற்பகுதியில் இருக்கும் போது சோர்வு, வயிற்றுப் போக்கு, உடல் மெலிதல் போன்ற நோய் குணங்கள் காணப்படும்.

இப் புழு மூளையில் வளரும் போது மூளைக்கோளாறு ஏற்படும் தசைவலி, கண்வலி, வலிப்பு நோய் ஏற்படும்.

### தடுப்புமுறை

1. நோய்யுற்ற பன்றி இறைச்சியை உண்ணக் கூடாது.

பன்றி இறைச்சியை நன்றாக வேகவைத்து சாப்பிடுவதால் இந்நோய் பரவ வாய்ப்பேயில்லை பன்றிகளை விஞ்ஞான முறைப்படியே வளர்க்க வேண்டும்.

மனிதர்கள் குடற்புழு நீக்க மருந்துகள் உங்கள் மருந்துவர் அறிவுறைப்படி நீக்கவேண்டும்.

உணவு விடுதிகளில் (HOTELS) மாமிச வகைகள் நன்றாக வேகவைத்துள்ளார்களா என்பதை மிக உண்ணிப் பாகக் கேட்டு வாங்கி உற் கொள்ளவேண்டும்.

நவீன உலகில் மிகவேகமாக உணவுகளை தாயார் பண்ணுகிற FAST FOOD போன்ற உணவு விடுதிகளில் உட்கொள்ளும்போது நன்றாக வேகவைத்து வாங்கி உட்கொள்ள வேண்டும்.

இதன் மூலம் இந் நோய்களில் இருந்து மனிதர்கள் தங்களை 100 % பாதுகாத்துக் கொள்ள லாம்.

எனவே மிக எளிதான தடுப்பு முறைகளை பின்பற்றினால் நல்ல மாமிசமாக மனிதன் உட்கொண்டு வாழலாம். □

டாக்டர்
N. அன்புச்செழியன்

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தி, வட்டு துணைவி அ.மி.த.க.பாடசாலை, சுதுமலை அ.த.க.பாடசாலை, மல்லாகம் கனிஷட வித்தியாலயம் மற்றும் சோதிவேம்படி வித்தியாசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிக்கு வெற்றிடமுள்ளது.

இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2,1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்ப படிவத்தினை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் கேட்டுள்ளார். (ற)

## கட்டணத்தில் மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கட்டணங்களின அடிப்படையில் 5 ரூபா கட்டணத்தில் எதுவித அதிகரிப்பும் செய்யப்படவில்லை. (ற)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கிய விழா தொடர்பாக சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே, அனைத்து சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அங்கத்தவர்களையும், பொறுப்பாசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அத்தியட்சகர் கேட்டுள்ளார். (ற)

## விவசாயச் செய்கையில் ஈடுபடுவது குறித்து முத்தரப்புச் சந்திப்பில் ஆராய்வு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக கோயல் பகுதியில் முஸ்லிம் விவசாயிகள் விவசாய செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்குத்தீர்வு காணும் பொருட்டு கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்றில் முத்தரப்பில் சந திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற இச சந்தியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் முஸ்லிம் பிரதிநிதிகள, முஸ்லிம் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடடமடுப்பிரதேசத்தில், போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் இரண்டு போகங்களில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய முஸ்லிம் விவசாயிகள், எதிர்வரும் அடுத்த போகத்திலும் இவ்வாறு அனுமதிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

காணி உறுதி மற்றும் அனுமதிப் பத்திரங்களும் தங்களிடம இருப்பதினால் எவ்வித தங்கு தடையுமின்றி தாங்கள் விவசாயச் செய்கையில் ஈடுட அனுமதிக்க வேணடுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

முஸலிம் தரப்பினரின் இந்தக கோரிக்கையை நிராகரிக்கும் வகையில்,

சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதன் பதிலளிக்கையில், சம்பந்தப்பட்ட காணி மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணி யெனக் கூறினார் பின்னர் இருதரப் பினரும் இவ்விடயம் குறித்துப் பேசி ஒரு இனக்கத் தீர்வைக் கண்டனர்.

எதிர்வரும் சனிக்கிழமை காணிப்பதிவு ஆணையாளர் வரவழைக்கப்பட்டு காணி உரிமையாளர்களை இனம் காண்பது என்றும் பின்னர் அடையாளக் காணப்பட்ட உரிமையாளர்களை விவசாயச் செய்கையில் ஈடுபட அனுமதிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் குயிலின்பனும் தலை மையிலான குழுவினரும், அக்க ரைப்பற்று சாமாதான சபைத் தலைவர் அப்துல் ஜாவ்வர் தலைமையிலான முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ற-8)

## யாழில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டாக்டர் எம்.உமா சங்கான் கோரிக்கையின் பேரில், வத்தளை 306 பி மாவட்ட லயன்ஸ் கழகம் இரத்ததான முகாமொன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்.மாவட்டப் பாதுகாப்புப் படையினர் இந்த ஏற்பாட்டுக்கான உதவிகளைச் செய்வதோடு, முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்திற்கு உதவும் முகமாக இரத்ததானமும் செய்யவுள்ளனர்.

இந்த இரத்ததான முகாம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து-19)

## ரிச்சர்ட் படுகொலை வழக்கு; நவம்பர் 15 இல் விசாரணை

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் ரிச்சர்ட்டி சொய்ஸா படுகொலை வழக்கு, அடுத்த மாதம் 15 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இவ்விசாரணைக்கு ஆஜராகுமாறு சாட்சிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இப்படுகொலை வழக்கல் ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் உட்பட 3 பேர் சந்தேக நபர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களை கொழும்பு மேல் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்திருந்தது.

இந்நிலையில், இவ் வழக்கு குறித்த விசாரணை எதிர்வரும் நவமபா மாதம் 15 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு இராஜசிரியவில் உள்ள அவரது வீட்டிலிருந்து ரிச்சர்ட்டி சொய்ஸாவை கடந்திச் சென்று கொலை செய்ததாக சட்டமா அதிபர் சந்தேக நபர்களுக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-7)

## போக்குவரத்துக்கு இடையூறாக பாதணிகள் விற்றவருக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களினதும், ஏனைய வாகனங்களினதும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், யாழ்.பஸ் நிலையத் திற்கு முன்பாகவுள்ள கடையொன்றின் முன்பாக பாதணிகளைப் பரப்பி வியாபாரம் செய்த நபர் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபரை யாழ்.சிறுகுற்றப் பிரிவுப் பொலிஸார் கைது செய்து கடந்த திங்களன்று யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

இதனை விசாரித்த நீதிபதி, இந் நபருக்கு ஆயிரம் ரூபா தணடப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன்,

தர்மபபணத்தை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், பொலிஸாரால் கைப்பறறப்பட்ட பாதணிகளை திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்திற்கு வழங்கும் படியும் உத்தரவிட்டப்பட்டது. மேலும் இவை வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தி சிறுவர் இல்லப் பொறுப்பதிகாரியிடம் இருந்து அறிக்கைசமர்ப்பிக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டது.

போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பாதணிகளை கடைமுன்பாக பரப்பி வியாபாரம் செய்ய வேண்டாம் என்று யாழ்.மாநகர சபையும் யாழ்.போக்குவரத்துப் பொலிஸாரும் அறிவுறுத்தியுள்ள போதும் அவற்றைக் கருத்திற் கொள்ளாததையடுத்தே பிரஸ்தாப நபர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-5,19)

## இன்று ஒரு தகவல்

## மொரார்ஜி தேசாய்

1944 ஆம் ஆண்டு மொரார்ஜிதேசாய் சிறையில் இருந்த காலம் ஒருநாள் காவல்துறை உயரதிகாரி ஒருவர் வந்தார். மொரார்ஜி தேசாயை சிறை அதிகாரியின் அலுவலகத்திற்கு அழைத்துக் கொண்டுவந்தார். சிறை அதிகாரி ஒரு தகவலைச் சொன்னார்."உங்கள் நண்பர் மங்கல்தாஸ் பக்வாசா என்பவர் நாசிக் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவரது உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டதனால் அவரை சிறையிலிருந்து மும்பையிலுள்ள ஹரிகின்தாஸ் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அவர் உங்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அதனால் நீங்கள் நிபந்தனையில் போய் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார்.

தியாகச்செம்மல்கள் நிபந்தனையில் போய் வருவதில்லை என்ற உறுதியுடன் தான் சிறைச்சாலைக்கே செல்வார்கள். அப்படி இருக்கும்போது மொரார்ஜி மட்டும நிபந்தனையில் செல்ல எப்படிச் சம்மதிப்பார்? உயிர் நண்பரின் உயிர் ஊசலாடுகின்றது என்பதைக் கேட்டதும் உடனே போய்ப்பார்க்க வேண்டுமென்று ஆவல்தான். இருந்தாலும் வரன்முறையை மீறிப்போய் பார்ப்பதென்றால் அது தேச பக்தியையே அவமானப்படுத்துவதுபோலாகும் என்பதை அவர் உணர்ந்தார்.அதனால் "நிபந்தனையில் போவதற்கு நான் தயாராக இல்லை" என்று கூறி விட்டார். "நணபரது கடைசி ஆசையை நிறைவேற்றுவது உங்கள கடமை இல்லையா?" என்று கேட்டார் சிறை அதிகாரி. "கடமைதான் அதே சமயம் என் கடமையைக் காப்பாற்றுவதும் முக்கியம் தான்" என்றார் இவர்.

அதன்பின் அந்த அதிகாரி நிபந்தனை இல்லாமல் மொரார்ஜியை வெளியே அனுப்பச் சம்மதித்தார். அப்படி இருந்தும் மற்ற நண்பர்களுடன் கலந்துரையாடிய பின்பே மொரார்ஜி தேசாய் மும்பைக்கு வெளிக்கிட்டார். படுக்கையில் இருந்த நண்பரைச் சந்தித்தார். அவர் மிகவும் மோசமான நிலையில் இருந்தார். உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள்.

மங்கல்தாஸ் "இனி எனக்கு வாழ்வில் என்ன இருக்கிறது? நான் இறந்துவிடுவதே மேல்" என்றார். மொரார்ஜிக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது. மங்கல்தாஸின இல்லத்தில் இருந்த போதுதான் மொரார்ஜியை கைது செய்தனர். இந்த அதிர்ச்சி தான் மங்கல்தாஸை மிகவும் பாதித்துள்ளதென்பதை இவர் புரிந்து கொண்டார்.

"இதோ பாருங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வதும் சிறையில் அடைபபதும் சகஜம்தானே. அன்று உங்கள் வீட்டில் இருந்தபோது நான் கைது செய்யப்படாவிட்டாலும் இன்னுமோர் இடத்தில் நான் கைது செய்யப்பட்டுத் தான் இருப்பேன். அதனால் அதைப்பற்றி நீங்கள் ஏன் வேதனைப் படவேண்டும்? நீங்கள் தைரியமாகவும் உறுதியாகவும் இருக்கவேண்டும் என்றார் மொரார்ஜி தேசாய்.

அதுமட்டுமல்ல அதுவரையில் மருந்தே சாப்பிடாமல் இருந்த மங்கல்தாஸை மருந்து சாப்பிட வைத்தார். இரண்டு நாட்கள் அவருக்குப் பக்கத்திலேயே இருந்தார். அதன் பின் வைத்தியரைப் பார்த்து மங்கல்தாஸின் உடல் நலம் குறித்து விசாரித்தார். "இப்போது பரவாயில்லை உடல் நலம் தேறிவருகிறது. எப்படி இருந்தாலும் இன்னும் ஆறுமாதங்கள் தான் அவர் உயிருடன் இருப்பார்" என்று கூறிவிட்டார் டாக்டர்.

ஆனால் அதன்பின் நடந்தது என்ன தெரியுமா? மங்கல்தாஸ் அதன்பின் 25 வருடங்கள் நலமாக இருந்தார். இவர் 6 மாதம் தான் இருப்பார் என்று சொனன அந்த டாக்டர் எதிர்பாராத விதத்தில் சிக்கி இறந்துவிட்டார். 6 மாதம் என்று டாக்டர் போட்ட கணக்குசரி தான். ஆனால் இடம் தான் மாறிப் போய் விட்டது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசாங்கத்தின் உட்கட்சி முரண்பாடுகள் நாட்டுக்காக இணக்கத்தில் முடிவடையும்

## ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்தினுள் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் இருந்தாலும் நாட்டிற்காக ஒன்றிணைந்து செயற்பட அத்தகைய அணிகளால் முடியுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சாகித்திய பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசுடன் தொடர்புபட்டுள்ள அணியினரிடையே பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுவதால் கருத்து முரண்பாடுகள் ஏற்படக் கூடும். ஆயினும் அந்த முரண்பாடுகள் இறுதியில் ஒரே நோக்கில் இணக்கமாக முடிவடையும்.



எனினும் சில பிரிவினரிடையே அற்ப பிரச்சினைகளுக்குக் கூட பெரிதாக சண்டையிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது பலமான தேசிய கலாசார உரிமைகளுடன் தமிழ்- முஸ்லிம் மக்களின் கலாசரங்களும் சேர்ந்து கொண்டுள்ளன.

அரசாங்கம் என்ற முறையில் தேசிய கலாசாரதிற்கும் இறைமைக்கும் சிறந்த இடமொன்றைப் பெற்றுக் கொடுப்பதோடு நவீன உலகின் சவால்களை எதிர்நோக்கக் கூடிய சூழ்நிலையையும் உருவாக்குவதே எமது நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

(ற-7)

# ஊர்காவல்படையினர் விடுதலை குறித்து புலிகளுடன் பேச இரகசியத் தூதுவர்?

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரையும் விடுதலை செய்யுமாறு கோரி அரசாங்கம் இரகசியமாகத் தூதுவர் ஒருவரை கிழக்கு மாகாண புலிகளின் தளபதிகளை சந்திப்பதற்கு அனுப்பியுள்ளதாகவும், இவர் தற்போது திருகோணமலையைச் சென்றடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுத் தலைவர் புறு ஹொவடேயைச் சந்தித்த போது இது விடயம் குறித்த அரசாங்கத்தின் கோரிக்கையை நிராகரித்திருந்தார். தெறகல் பிடிபட்ட 10 விடுதலைப் புலிகளை விடுதலை செய்ய சம்மதித்தால் ஊர்காவல் படையினரின் விடுதலை தொடர்பாக சிந்திப்போம் எனவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இது விடயம் தொடர்பில பாதுகாப்பு அமைச்சு இடைவிடாது கண்காணிப்புக்குழுவுடன் தொடர்பினை ஏற்படுததி வருகிறது. சு.ப.தமிழச்செல்வன் நாட்டில் இல்லாத காரணத்தினால் இதுபற்றி அவருடன் விவாதிக்க முடியாதிருப்பதாக பரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விரு ஊர்வல் படையினரையும் விடுதலை செய்யுமாறு வட-கிழக்கு சிங்கள அமைப்பு அரசாங்கத்திற்கு இரண்டுவார காலக்கெடு விதித்திருந்தது இது எதிர்வரும் வியாழனன்று முடிவடைகிறது.

இந்நிலையில் இவ்விரு ஊர்காவல்படையினரின் விடுதலை குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாத பட்சத்தில் சிங்கள மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தப்போவதாகவும் அவ் அமைப்பு எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-6)

## இராசி பலன்

**07.10.2004**
**(புரட்டாதி 21 வியாழக்கிழமை)**
**நவமி முழுவதும்**
**புனர்பூசம் மு. இ 7.21மணிவரை**
**இராகுகாலம் 1.32 -3.02 மணிவரை**
**சுப நேரம் 7.32-9.02 மணிவரை**

**மேடம்**
நற்கீர்த்தி, மனோ தைரியம், எடுத்தகாரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி

**இடபம்**
போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், காரிய தாமதம், அதிக செலவு.

**மிதுனம்**
வெகுமானம், சயன சுகம், போசன சுகம், புதிய முயற்சி.

**கடகம்**
சோம்பல் நிலை, இடமாற்றம், குடும்பக்கவலை, கீழ்ப்படிதல்.

**சிங்கம்**
ஆனந்தம், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மாதர் உதவி.

**கன்னி**
ஆரோக்கியம், பிரபுத்தனம், நன்கொடை, நல்ல மரியாதை.

**துலாம்**
உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, நிர்ப்பந்திக்கப்படுதல்.

**விருச்சிகம்**
மனக்கவலை, பொருள் விரயம், கலகம், போசன சுகம்.

**தனுசு**
சௌபாக்கியம், சயன சுகம், புதிய முயற்சி, கலந்துரையாடல்.

**மகரம்**
புதிய விடயம், செல்வாக்கு, சந்தோசமான நிலை, பிறர் உதவி.

**கும்பம்**
சரீரப்பிரயாசை, பணவிரயம், மனக்கவலை, காரிய இடையூறு.

**மீனம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், காரிய தாமதம், ரோகநிலை.

*பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.*
*-வளவன்*

## 3 பாடசாலைகளின் அபிவிருத்திக்கென நிக்கொட் 15.1 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள மூன்று பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கென நிக்கொட் நிறுவனம் 15.1 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

வடமாராட்சி கல்வி வலயத்தில் இயங்கும் கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலையின் அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 5.2 மில்லியன் ரூபா நிதியின் மூலம் புதிய வகுப்பறைகள் மற்றும் சகல வசதிகளையும் உள்ளடக்கிய நூல் நிலையம் என்பன நிர்மாணிக்கப்படவுள்ளன மற்றும் தொண்டமனாறு வீரகத்தி வித்தியாலய அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 5.4 மில்லியன் ரூபா நிதியின் மூலம் வகுப்பறைகள் மற்றும் ஒரு பொது மண்டபமும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் மட்டுவில் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4.5 மில்லியன் ரூபா நிதியின் மூலம் வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

மேற்படி கட்டடங்களுக்கான திட்டங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு விரைவில் கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளதாக யாழ்.கல்விவலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ற-5)

## மன்னார் – வவுனியா வீதியில் தீவிர சோதனை நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் - வவுனியா வீதியில் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் பகுதிகளிலிருந்து தென்னிலங்கைப் பகுதிக்கு போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் குறிப்பிட்ட வீதிகளில் செல்லும் வாகனங்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு பொலிஸாரால் சோதனையிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ற-8)

# டெஸ்ட் ஹொக்கிப் போட்டித் தொடரை வெல்லும் வாய்ப்பு பாகிஸ்தானிற்கு

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான நட்புறவு ஹொக்கி டெஸ்ட் தொடரின் 5வது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வென்றது.

டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றதன் மூலம் 8 போட்டிகள் கொண்ட தொடரில் 3-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. போட்டித் தொடரின் முதல் 4 ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடந்து முடிந்தன.

இந்தியாவில் நடைபெறும் 4 ஆட்டங்களில முதல் ஆட்டம் டெல்லி தேசி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது ஆரம்பம் முதலே பாகிஸ்தானுக்கு சாதகமாக இருந்தது. இப்போட்டியின் முதல்ப் பாதியின் இறுதியில் பாகிஸ்தான 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெறறது. ஆட்டத்தின் 6-வது நிமிடத்தில் பாகிஸ்தானின் காசிஃப் ஜவாத் முதல் கோலை அடித்தார். அதன் பிறகு சோகைல் அப்பாஸ் 29வது நிமிடத்தில் கோல் அடித்து கோல் வித்தியாசத்தை உயர்த்தினார்.

இந்திய வீரர்கள் மோசமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். அவர்கள் செய்த பல தவறுகள் பாகிஸ்தானுக்கு பல பெனால்டி கோணர்களைப் பெற்றுத்தந்தது. ஆட்டத்தின் 50வது நிமிடத்தில் இந்தியாவின் சந்தீப் மைக்கேல் கோல் அடித்து கோல் வித்தியாசத்தைக் குறைத்தார். அதன் பிறகு ஸ்கோரை சமன் செய்ய இந்தியாவுக்கு பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் இந்திய வீரர்கள் அவற்றை சரியாகப் பயன்படுத்தாததால் ஆட்டத்தின் 65வது நிமிடத்தில் சோகைல் அப்பாஸ் மற்றொரு கோலை அடித்து ஸ்கோரை 3-1 என்று உயர்த்தினார்.

இந்தியாவின் முன்கள வீரர் ககன் அஜீத் சிங் காயம் காரணமாக இத் தொடரில் விளையாடவில்லை. பந்தைச் சிறப்பாகக் கடத்திச் சென்று அதை கோலாக்குவதில் இந்திய வீரர்கள் சரியாக சோபிக்கவில்லை. பந்தையும் சரியாக பரிமாறாமல் திணறினர். அதே நேரத்தில் பாகிஸ்தான் வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி, இந்தியர்களை தவறுகள் செய்யும்படி செய்தனர். அதன் மூலம் பெனால்டி கோணர்களையும் பெற்றனர். மேலும் பந்தை தங்களுடைய கோல் கம்பத்துக்கு அருகில் எடுத்துச்சென்று இந்திய வீரர்களை திணறடித்தனர்.

இந்திய கோல் கீப்பர் அட்ரின் டிசௌசா குறிப்பிடும்படி விளையாடினர் எதிரணியினர் அதிக கோல்களை அடிக்காமல் அவர் தடுத்து நிறுத்தினார்.

அடுதது சண்டீகரில் நடைபெறும் போட்டியிலும் வெற்றிபெற்றால் தொடரை பாகிஸ்தான் வெனறுவிடும் 1978 முதல் இரு அணிகளும் இதுவரை விளையாடியுள்ள 8 டெஸ்ட் தொடாகளில் பாகிஸ்தான் 5 முறை வென்றுள்ளது. இந்தியா 2 முறை வென்றுள்ளது. ஒருமுறை வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இதேவேளை, சோகைல் அப்பாஸ் வேகமாக அடித்த பந்து முகத்தில் பட்டதால் இந்திய அணித் தலைவர் திலிப் திர்க்கே காயமடைந்தார். மைதானத்திலேயே அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்ட போதும் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார். காயம் தீவிரமாக இருப்பதால் அடுத்து நடைபெறும் 3 போட்டிகளில் அவர் விளையாடுவது சந்தேகமே.

இந்திய அணியின்பயிற்சியாளர் ஜேரார்டுராச் உடல் நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. அவரும் தற்போது மருத்துவமனையில் சோக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.(ப-7)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி


(மாதகல்)

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச சுற்றுப்போட்டியின் இறுதிப் போடடிகள் கடந்த திங்களன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 18 வயதிற்குட்பட்டோர் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி, அராலி இந்துக்கல்லூரி அணியை 2-0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுக்குட்பட்டோர் பிரிவில் அராலி இந்துக்கல்லூரி விக்ரோறியாக கல்லூரியை 1-0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

14 வயதிற்குட்பட்டோர் பிரிவில சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அராலி இந்துக்கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ப-24)



தற்போதைய தலைசிறந்த டென்னிஸ் வீராங்கனையான குஸ்னெட்ஷோவாவும் முன்னாள் உலகச் சம்பியனான மாட்டினா நவரட்லோவாவும் விழா ஒன்றில் நலம் விசாரிக்கின்றனர்.

# இலங்கையில் காற்பந்தாட்டம் பாரியளவில் பின்தங்கியுள்ளது

இலங்கையின் கிரிக்கெற் அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடியளவிற்கு திறமைமிக்க அணியாக வளர்ந்துவரும் நிலையில் இலங்கையின் கால்பந்தாட்டம் மிகப் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ளதாக இந்தியக் காலபந்துச் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இந்திய காற்பந்துச் சம்மேளனத்தின் செயலாளர் சுஹோட்டோ டற்கா கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் தனது நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை. மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையில் இலங்கையில் காற்பந்தாட்டம் இருக்கிறது என கூறியுள்ளார்.

தற்போது இந்தியாவில் நடைபெறும் ஐ.எவ்.ஏ.கிண்ண காற்பந்துச சுற்றுப்போட்டிகளில் இலங்கை சார்பாக ஒரு அணி பங்குபற்றுகிறது. இலங்கையில் காற்பந்தாட்டத்தில் திறமைமிக்க அணியாகக் கருதப்படும் நெனோன் கழக அணியே அந்த அணியாகும்.

இவ்வணியில் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாட்டு வீரர்களும் இடம்பெறுவதாக இலங்கைக் காற்பந்துச் சம்மேளனம் கூறியபோதும் அவ்வாறு யாரும் இடம்பெறவில்லை. என்றும் இலங்கை பொய்கூறி தம்மை ஏமாற்றி விட்டதாகவும் இந்திய காற்பந்துச் சம்மேளனம் குற்றம் சாட்டியிருக்கிறது.

இதனால் இலங்கைக் காற்பந்துச் சம்மேளனம் மிகவும் அவமானத்திற்கு உள்ளாகியிருப்பதுடன் அது பல நடவடிக்கைகளை சிந்தித்துச் செயற்பட வேண்டிய சூழ்நிலையிலும் இருக்கிறது எனவும் சுஹோட்டோ டாக்கா மேலும் கூறியுள்ளார். (ப-7)

## குண்டெறிதல் போட்டியில் யாழ்.மாணவி முதலிடம்

தேசிய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் இம் மாதம் 1 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் யாழ்மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய யாழ். கனகரட்னம் மகாவித்தியாலய மாணவி குணரட்னம் தர்சினி 21 வயிதிற்குட்பட்ட பெண் களுககான குண்டெறிதல் போட்டியில் 9.66 அ தூரத்திற்கு குண்டை எறிந்து முதலாம் இடத்தைப் பெற்ற தங்கப் பதக்கதைப் பெற்றுள்ளார் யாழ்மாவட்ட வீராங்கையொருவர் பல வருடங்களின் பின் இப் போட்டியில் பங்குபற்றி முதல் இடத்தைப் பெற்றது யாழ்.மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் ஓர் விடயம் என்பது குறிப்பிடத்தக்கது. (ப,17,19)

## லங்கா செயார் கழகத்திற்காக விளையாட முரளிதரன் ஒப்பந்தம்



இங்கிலாந்து மாநில கிரிக்கெற் போடடிகளில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள போட்டிகளில் அரைவாசிப போட்டிகளில விளையாடுவதற்கு உலக சாதனையாளரான நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஒப்பந்தங்கவில் கைச்சாத்திட்டுள்ளார். இங்கிலாந்தின் லங்கா செயலர் பிராந்திய அணியுடனேயே முரளி ஒப்பந்தம செய்துள்ளார். தோள்மூட்டுச் சத்திர சிகிச்சையின் பின் குணமடைநது வரும் முரளிதரன் 1999,2001ஆம் ஆண்டுகளில் லங்கா செயார் அணிக்காக 14 முதற்தரப் போட்டிகளில் விளையாடி சராசரியாக 15.6விக்கெற்றுக்களை, அதாவது மொத்தம 116 விக்கெற்றுக்களைக் கைப்பற்றி இருக்கிறார்.

முரளிதரன் தமது கழகத்தில் விளையாடுவது மகத்தான விடயமென லங்கா செயார் அணி முகாமையாளர் மைக்கல் வன்கிற்ஸன் கூறியிருக்கிறார். (ப-7)

## விளையாட்டு செய்திகள்

## நட்சத்திர ஹோட்டலில் சச்சின் விருந்துபசாரம்

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது மிகப்பெரிய அரண்மனை போன்ற நட்சத்திர ஹோட்டலில் விருந்துபசாரம் ஒன்றை அளித்துள்ளார்.

எனினும், இந்த விருந்து உபசாரத்திற்கு தனது சக அணி வீரர்கள் எவரையும் டெண்டுல்கர் அழைக்கவில்லை. தனது மிகவும் நெருங்கிய நண்பர் எனக் கூறப்படும் ஷேர்ன் வோனையும் மற்றும் 5 அவுஸ்திரேலிய முன்னணி வீரர்களையும் ஏனைய பொலிவூட் நட்சத்திரங்கள பலரையும் அவர் அழைத்திருந்தார்.

இதேவேளை, சச்சின் இந்திய அணியில் ஒரு தனிமரமாக இருக்கிறார் என வெளிநாட்டு ஊடகம் ஒன்று கூறியிருக்கிறது.


இந்திய அணி வீரர்கள் சச்சினை ஒரு குருவாக மதிப்பதிலேயே அவர்கள் விருந்துக்கு அழைக்கப்படவில்லை எனவும் கருத்துக் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் இந்திய அணி வீரர்கள் அனைவரும் சச்சினைப் போன்று வரவேண்டும் என்பதிலேயே ஆர்வமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-7)

# பெங்களூர் கிரிக்கெற் மைதானம் சுழற்பந்துக்கே சாதகமானது

இந்திய டெஸ்ட் தொடர்பற்றி தனது கருத்துக்களைக் கூறியிருக்கிறார் அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் கிலன் மெக்ராத்.

முதல் டெஸ்ட் நடக்கும் பெங்களூர் சின்னசாமி மைதானம் நான் நினைத்தது போலவே சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம் தான். வேகப்பந்து வீச்சாளர்கள் இங்கு முழுத்திறமையையும் காட்டினால்தான் திறமையாக விளையாடலாம். எங்கள் அணியைப் பொறுத்தவரை கில்லெஸ்பி, காஸ்ப்ரோவிப ஆகியோர் பிரமாதமாக பந்து வீசுகிறார்கள். இந்தத் தொடரில் நாங்கள் மூன்று பேரும் முழுத் திறமையையும் வெளிப்படுத்தும் பட்சத்தில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வீசும் வாய்ப்பு ஷேன்வோர்னுக்குக் கிடையாது. அநேகமாக மத்திய வரிசை வீரர்களுக்குத்தான் அவர் பந்துவீச முடியும்.இந்திய அணியின் மத்தியவரிசை வீரர்களைப் பொறுத்தவரை மூன்று ஆண்டுகளுக்கு முன் இருந்த அதே வீரர்கள்தான் இப் போதும உள்ளனர். ஷேவாக்கிற்கு ஒரே ஒருமுறை பந்துவீசியிருக்கிறேன். அதுவும் உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் அவர் அதிரடி வீரர். அவர்போன்ற வீரர்களை வீழ்த்துவது சுலபம். ஆகாஸ் சோப்ரா எப்படி விளையாடுவார் என்று கேள்விப்பட்டதுகூட இல்லை. ரீ.வியில் முன்னைய போட்டிகளைப் பார்த்து இவர்கள் ஆட்டமுறைகளைக கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறேன்.

இது எங்களுக்கு முக்கியமான தொடர். அணியில் உள்ள ஒவ்வொருவரும் அதை நன்கு உணர்ந்திருக்கிறோம். முதல் நாளில் இருந்தே ஆதிககம் செலுத்த முயற்சி செய்வோம் முதல்நாள் ஆட்டம் எப்படி இருக்கிறதோ அதுதான் இந் தத்தொடரின் எஞ்சிய பகுதியை தீர்மானிக்கும் என்று நம்புகிறேன். அருமையான இப் போட்டியை மழை குறுக்கீடு செய்யாவிட்டாலும் போட்டி மிகச்சிறந்த சுவாரஸ்யமானதாக அமையும் எனவும் மெக்ராத் கூறியிருக்கிறார். (ப-7)



எதென்ஸில் நடைபெற்ற ஊனமுற்றோருக்கான பாரா ஒலிம்பிக் போட்டியில் சக்கர நாற்காலி ஓட்டத்தில் தங்கம் வென்ற கிறே தோம்ஸன் தனக்கு அடுத்து வந்தவரை 100மீற்றர் இடைவெளியில் முன்னுக்கு வந்து வெற்றிபெற்றார்.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும் - குறள்

**வலம்புரி**

## தேசிய ஆலோசனை சபை வெற்றி தருமா?

எதிர்க்கட்சிகளின ...ும், விடுதலைப் புலிகளின தும் ஆதரவின்றி தேச ஆலோசனைச் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்குரார்ப் பணம் செய்துள்ளார்.

இலங்கை இனவிவகாரத்துக்கு தீர்வு காண் பதற்கென குழுக்களும், சபைகளும் அமைக்கப் படும் நிகழ்வானது, இலங்கை அரசுகளுக்கு புதியதொரு விடயமன்று. காலாகாலமாக இத் தகைய சபைகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அதனால் எந்தவித பிரயோசனமும் ஏற்பட்டதாக வரலாறு இல்லை.

ஆக, கட்சி ஆதரவாளர்களுக்கும், பாராளு மன்ற தேர்தலில் தோல்வி கண்டவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்குவதற்காக அமைக் கப்படுவதே இக் குழுக்களாகும். அவ் வகையில் தற்போது அமைக்கப்பட்டுள்ளதே தேசிய ஆலோ சனைச் சபையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை கலைப் புச் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்தை ஏற்படுத்தப்போவதாகக் கூறி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

அதனை நம்பிய மக்கள் தமது வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கி யிருந்தனர். ஆட்சியை கைப்பற்றும் நோக்கில் பிரசாரம் செய்த ஜனாதிபதிக்கு இனப்பிரச் சினைக் குத் தீர்வு காணும் எண்ணம் அறவே இல்லை என்பது வெளிப்படை.

அதனை ஜே.வி.பியுடனான கூட்டு உறுதிசெய் கின்றது. இருந்தும் 'சமாதானம்' என்பதற்காக மக்கள் தமது வாக்குகளை வழங்கினர். ஆனால் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க நாட்டு மக்களை ஏமாற்றி விட்டார்.

சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம் பிக்க வேண்டிய அவர் அவற்றைப் புறந்தள்ளி விட்டு, தேசிய ஆலோசனை சபை என்ற பெயரில் கபட நாடகம் ஆடுகின்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தேசிய ஆலோசனை சபை அவசியம் எனில் 'தேசியம்' என்ற கருத்தை அந்த சபை பிரதிநிதித்துவம் செய்வதாக இருத்தல் வேண்டும். ஆனால், எதிர் கட்சிகள் தேசிய ஆலோசனை சபைக்கு ஆதரவு வழங்க மறுத்துவிட்டன. அவ்வாறாயின் அது எவ்வாறு தேசிய சபையாக இருக்கமுடியும்?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு சபை ஆரம்பத்திலேயே குழப் பங்களையும், குத்து வெட்டுக்களையும் கொண்டி ருக்குமானால், அந்த சபையால் எந்த அளவு தூரம் முன்னேற்றமாகச் செயற்படமுடியும்?

இது நியாயமான கேள்வி. அதிலும் இனப்பிரச் சினைக்கு தீர்வுகாண்பது என்பது தனித்து ஜனாதிபதியாலோ அன்றி அரசினாலோ செய்யப் படுவதொன்றல்ல. மாறாக மறுபுறத்தில் அரசின் அதே பலத்துடன் இருக்கக்கூடிய விடுதலைப் புலி களும் இணையும்போதே தீர்வு என்பது பெறப்படும்.

ஆனால், இந்த இடத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவறு விட்டுவிடுகின்றார். அதாவது இலங்கை பௌத்த சிங்கள நாடு - ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் உண்டு. என்றெல்லாம் அவர் நினைக்கின்றாரே தவிர யதார்த்த நிலையை உணர்வதாக இல்லை.

எடுத்த விடயங்களுக்கெல்லாம் 'ஜனாதிபதி யின் அதிகாரம்' பற்றிக் கூறும் அவர் வன்னிப் பிராந்தியத்திற்குச் செல்வதாயின் விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற உண்மையை மறந்து விடுகின்றார்.

இந் நிலையிலேயே தேசிய ஆலோசனை சபை என்று ஓர் புதிய குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். இலங்கை இனப்பிரச்சினை தீர வேண்டுமாயின் - தீர்க்கப்படவேண்டுமாயின் விடுதலைப் புலிகளின் இணக்கப்பாடு அவசியமாகும். அவர்களின் இணக் கப்பாடு இன்றி ஆயிரம் சபைகளை அமைத்தாலும் தீர்வு எட்டப்படமுடியாததாகும்.

## பொருட்களின் விலையுயர்வுக்கு ஏற்ப உரிய கொடுப்பனவுகளை வழங்குமாறு அரசதுறை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சமர்பபிக்கப்படவுள்ள வரவு- செலவு திட்டத்தில சம்ப ளத்தை அதிகரிப்பதற்கு முன்பாக அதிகரித்துள்ள பொருட் களின் விலைகளுக்கு ஏற்ப கொடுப்பனவுகளை வழங் குமாறு கோரி அரச துறை ஊழியர் தொழிற்சங்கக் கூட்ட மைப்பினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம ஒன்றை நடாத் தியுள்ளனர்.

அரச துறையில் பெரும்பாலானவற்றில் சம்பள முரண் பாடுகள் உள்ளன. இந்த நிலைமையை மாற்றி நியாயத் தைப் பெற்றுக் கொடுப்பதாக கூட்டமைப்பு அரசாங்கம் உறுதி யளித்தது.

ஆனால் இதுவரை உறுதி மொழிகள் எதுவும் நிறை வேற்றப்படவில்லை. வரவு – செலவுத் திட்டத்தில் சம்ப ளம் அதிகரிக்கப்படுமென்று எமக்கு எதுவித நம்பிக்கை யும் கிடையாது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் சம்பளம் அதி கரிக்கப்படுமென்று கூட்டமைப்பினர் தெரிவித்தனர் ஆனால், சம்பள முரண்பாடுகளுக்கு மத்தியில் தற்போது பஸ் கட்டணம் அதிகரித்துள்ளது இதனையெல்லாம் ஈடுசெய்ய முடியா துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மரத்திலிருந்து விழுந் தவனை மாடு ஏறி மிதித்த கதையாகவே உள்ளது. எனவே, சம்பளம் அதிகரிக்கப்படும் வரை எமக்கு உரிய கொடுப்பனவு களை வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(ற-8)

## பொலநறுவையில் இரு இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்

### இருவர் பலி; ஒருவர் படுகாயம்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்த பிரதேசத்தில் ஆசிரியர் ஒருவர் உட்பட இரண்டு முஸ்லிம்கள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கட்டுவன் வில்லைச் சேர்ந்த ஆசிரியர் கே.எம்.குத்தூஸ் (வயது 47) மற்றும் என்.எம்.சேகு மொகமது (வயது 35)ஆகியோரோ உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ தினம் இரவு இவர்கள் அத்துகல கிராமத்தி லுள்ள தமது உறவினர்களின் வீட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்களி னால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தையடுத்து அப்பிரதேசத்தில் பதறற நிலை ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்து வெலிக்கந்தை பொலிஸார் தொடர்ந்து விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவும் பொலந றுவை முஸ்லிம் கொலனியில் ஒருவர் சுடப்பட்டு படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கே.ரஞ்சன் (வயது 38) என்ற இந் நபர் தொழில் புரியும் தனியார் அரிசி ஆலைக்குள் பிரவேசித்த போது இனந்தெரியாத ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோ கத்தை செய்து விட்டு தப்பிச் சென்றதாகத் தெரியவரு கிறது. (ற)

## கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துச் சேவைப் பிரிவுத் தாதியர் தொழிற் சங்கப் போராட்டம்

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின விபத்துச் சேவைப் பிரிவில் கடமையாற்றும் தாதிகள் நேற்று முன்தினம் தொழிற் சங்க எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் காரணமாக விபத்துச் சேவைப் பிரிவின் சேவைகள் பாதிக்கப்பட்டன.

வபத்துச சேவைப் பிரிவைச் சேர்ந்த தாதியர் ஒருவரை தீவிர சிகிச்சைப்பிபிவு வைத்திய நிபுணர் ஒருவர் தாக்கியமைக்கு எதிர்ப்புத் தொிவித்தே தாதிகள் இத் தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை பொலிஸாரிடம் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

பரச்சினைக்கு சுமுகமாக தீர்வு காண இரு தரப்பினருட னும் பேசசுவார்த்தை நடாத்தி வருவதாக அவசர சிகிச்சைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித் துள்ளார். (ற-7)

## வவுனியாவில் பதற்றம் தணிந்தது

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் தமிழ் இளஞர் குழுவுக்கும் முஸ்லிம இளஞர் குழுவுக்கும் இடையிலான முறுகல் நிலைமையை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இத னால் அப்பகுதியில் நிலவிய பதற்றம் தணிந்துள்ளது.

வவுனியா பசார் வீதியில் அமைந்துள்ள புடவைக்கடைக்குச் சென்ற பெண் ஒருவரை கடையின் உரிமையாளர் ஒருவர் அங்க சேட்டை புரிந்ததாகவும் இதனையடுத்து பெண் வீட்டுக்கு சென்று நடந்த சம்பவத்தைத தெரிவிக்க தமிழ் இளஞர் குழு ஒன்று தளத்திற்கு வந்து கடையின் உரிமையாளரைத் தாக்க முற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து தளத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் அனைவரையும் விரட்டி அடித்து நிலைமையினை கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவந்தனர். மன்னார் சம்பவத்துடன் இதனை இணைப்பதற்கு சிலர் முயற்சிப்பதாகவும் இதனால் தாம் அங்கு நின்ற அனைவரையும் கலைத்ததாகவும் பொலிஸார் தெரிவித் தனர்.

இச சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றது. இதற்கு முன்னரும் இவ்வாறு கடைகளுக்கு போகின்ற பெண்கள் மது சிலர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொளவதாக பல தடவை பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## கொலைகளுடன் தொடர்புடையவர் பொலிஸாரால் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட கல்முனைக்குடி மற்றும் சாய்ந்த மருது ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த சூத்தி ரதாரியை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறையைச் சேர்ந்த சுலைமை லெப்பை சலீம் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். கல்முனைக்குடி மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் அண்மைக் காலங் களில் ஒரு யுவதி உட்பட 4 முஸ்லிம்கள் இனந்தெரியாத ஆயுத பாணிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த ஆட்கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸா ருக்குக் கிடைத்த தகவலையடுத்து கடந்த மாதம் 14 ஆம் திகதி சம்மாந்துறையிலுள்ள குறிப்பிட்ட நபருடைய வீடு பொலிஸாரினால முற்றுகையிடப்பட்டது. எனினும் அவர் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்தார்.

தலைமறைவாகியிருந்த இவரை கல்முனை பொலி ஸார் கடந்த புதன்கிழமை கைது செய்து கல்முனை நீதிமன் றத்தில ஆஜர்படுத்திய போது, மேலதிக நீதிபதி எம். மொகி தன் இந் நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

## லெப். கேணல் நிரோஜனின் 5 ஆவது நினைவு நிகழ்வு

(முல்லைத்தீவு)

துணைத்தளபதி லெப். கேணல் நிரோஜனின் 5 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும்,

எம்.ரீ. சொய்சின், எம்.ரீ. கொய் ஆகிய இரு கப்பல்களி லும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் நினைவு களைத் தாங்கிய இசை ஒளி நாடாவான "அலைபாடும் பரணி" வெளியீட்டு நிகழ்வும்,இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தல் இடம்பெறவுள் ளன.

இசையமைப்பாளர் இசைப் பிரியனின் நெறியாளகையில தமிழீழ இசைக்குழுவினர் வழங்கும் இசை நிகழ்வும், வேறு பல கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ற)

## அவுஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் 'தியாக தீப கலை மாலை' நிகழ்வு

(அவுஸ்திரேலியா)

லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட் பட பன்னிரு வேங்கைகளினதும் முதற் பெண்புலி 2 வது லெப் மாலதி, தியாகி லெப். கேணல் தீலிபன், மூத்த தளபதி கேணல் சங்கர் ஆகியோரினதும் நினைவாக அவுஸ்திரேலியா மெல்போன நகரில் " தியாக தீப கலை மாலை'' நிகழ்ச்சியொன்று நடை பெற்றுள்ளது.

தமிழ் ஒருங்கிணைப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வில் பெருமளவான தமிழ் மக்கள் கலந்து கொண் டனர்.

தாயகப் போரில் வீரச் சாவடைந்த மாவீரர்கள் மற்றும் பொது மக்களுக்கான அக வணக்கத்துடன் இந் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெற்றது.

இதில் கலை நிகழ்வுகள் பல இடம் பெற்றதுடன, மாவீரர் களின வீடியோப் படங்களும் காண்பிக்கப்பட்டன. (ற-8)


**சாயி அருளமுதம்**



தனிப்பட்ட பிரயத்தனங்களும், தெய்வ அனுக்கிர கமும் ஒன்றில் ஒன்று தங்கியுள் ளன. பிரயத்தனம் இல்லையானால் பிரயத் தனத்தில் ரசனை இருக்க மாட்டாது. அந்த அனுக்கிரகத்தைப் பெற உங் களுக்குத் தேவைப்படுவது நம்பிக்கையும், நற்பண புமே. அவருடைய திருவருளைப் பெற வேண்டி அவரை நீங்கள் புகழ வேண்டிய தில்லை.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# இரண்டாம் கட்டப் பட்டதாரிகளுக்கு பயிற்சிநெறி ஆரம்பமாவது தாமதமாகும்

## நிதியமைச்சின் உயரதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக இரண்டாம் கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறியை அக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேவையான பயிற்சிநெறியை மேற்கொள்ளத் தேவையான இடவசதி உட்பட பல்வேறு நடைமுறை சிக்கல்கள் காரணமாக இப்பயிற்சி நெறியை ஆரம்பிப்பதைப் பிற்போட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நெறி கடந்தமாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருந்தபோதும் பல்வேறு காரணங்களுக்காக அக்டோபர் 15 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு இன ரீதியாக ஒடுக்கப்பட்டமையே காரணம்

## சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளை நாடு சுதந்திரம் அடைந்த போது வழங்கியிருந்தால் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்ந்திருப்பார்கள். நாட்டில் யுத்தம் ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, பறிக்கப்பட்டதுடன் இனரீதியாக தமிழ்மக்களை ஒழித்துக்கட்டவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் தமிழர் மட்டுமன்றி மூவின மக்களுமே பல்வேறு இன்னல்களை அனுபவிக்கவேண்டியுள்ளது. இவ்வாறு சட்ட மறுசீரமைப்பு அரசியல் ஒருமைப்பாட்டு அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்தார்.

பசறை கருணாரட்ண மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் 'சமூகங்களும் சமாதானமும்' என்ற பொருளில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது விடயம் குறித்து அவர் அங்கு உரையாற்றுகையில், அரசாங்க வேலைவாய்ப்பு நியமனங்கள் வழங்கும் போது கட்டாயம் சிங்களவர்களுக்கு தமிழ்மொழியும், தமிழர்களுக்கு சிங்கள மொழியும் தெரிந்திருப்பது அவசியமென்ற சட்டமொன்றை கட்டாயமாக்கினால் இனக் குரோதங்கள் ஏற்படவாய்ப்பு இருக்காது.

மேலும் தனிநபராலோ அல்லது தனிக்கட்சியாலோ மாத்திரம் சமாதான முயற்சிகளை வெற்றி பெற செய்யமுடியாது. சமாதானப் பேச்சுக்களின் இறுதிமுடிவுகள் மக்களின் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும்.

தேசிய ஆலோசனைசபையின் செயற்பாடுகளுக்கு மகாசங்கத்தினர் பூரண ஆதரவளித்துள்ள போதும் ஜாதிக ஹெலஉறுமய இதிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளமை கவலைக்குரியது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி தலைமை வகித்தால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஐக்கியதேசிய கட்சி அதற்கு பூரண ஆதரவு வழங்குமென பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருக்கிறார்.

(ந-7)

# இடையூறுகளின்றி....

இச்சந்திப்பில் 23 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் விஜித குணவர்த்தன கலந்துகொள்ளவில்லை.

முக்கியம்வாய்ந்த சில பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்ட பின் மட்டு - அம்பாறை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் தயாமோகன் கருத்துத் தெரிவிக்கையில்,

இச்சந்திப்பு வழமையானதும், நட்பு ரீதியாகவும் அமைந்திருந்தது. சென்ற மாதம் நாம் சந்தித்த போது அரசும் - விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசதில் எமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பல இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. இதனை இராணுவத் தரப்பினரிடம் கூறியுள்ளோம்.

இன்றைய சந்திப்பில் ஒரு சில முன்னேற்றகரமான விடயங்கள் பேசப்பட்டபோதும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு சில இடையூறுகள் தொடர்பாகவும் விபரமாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளோம்.

இராணுவ சோதனைச் சாவடிகளில் எமது பெண் போராளிகளை ஆண் படையினர் சோதனையிடுவதை தவிர்த்து பெண் படையினரே சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இராணுவத்தினரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக இராணுவத் தரப்பினர் கருத்து எதனையும் வெளியிடவில்லை. எனினும், இத்தகைய சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் இராணுவ அணியைச் சேர்ந்தவர்களும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவேண்டும் என்று இராணுவம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், இக்கோரிக்கை தொடர்பாக தாம் வன்னித் தலைமையுடன் தொடர்புகொள்ளவுள்ளோம் என்று கூறினார்கள்.

இந்த நிலையில், புலிகளைப் பொறுத்தவரையில் தற்போது அரசியல் பணிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சென்று மேற்கொண்டுவருகின்றனரெனினும், அவர்கள் இராணுவப் பிரிவுதான் என இராணுவத் தரப்பிடம் விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

நேற்றைய சந்திப்பின் போது மாதம் இரு தடவைகள் சந்தித்துப் பேசுவதற்கு என்பதற்குப் பதிலாக மாதம்தோறும் வரும் கடைசி வாரத்தில் சந்திப்புக்களை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம)

# ஹான்ஸ் பிரஸ்கர் மாத்தறைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் இவ்வாரம் தென் மாகாணத்திற்குச் செல்லவுள்ளார்.

மாத்தறை, காலி ஆகிய மாவட்டங்களுக்கு இவர் செல்லவுள்ளதாக நோர்வேத் தூதரகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நோர்வே அரசாங்கத்தினால் தென் மாகாணத்தில் உயர கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக றுகுணுப் பல்கலைக்கழகம் உட்பட ஏனைய கல்வி நிறுவனங்களுக்கு 16 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்நிதி ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அதன் செயற்பாடுகளை ஹான்ஸ் பிறஸ்கர் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-08)

# எலும்புக்கூடு மீட்பு

(கிளிநொச்சி)

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலில் பலியான இராணுவத்தினர் ஒருவரின் எலும்புக்கூடு நேற்று முன்தினம் கட்டட இடிபாடுகளின் நடுவில் கண்டெடுக்கப்பட்டது. இரு மாடிக் கட்டடச் சிதைவினை புனரமைப்புச் செய்தவேளையிலே இவ்வெலும்புக்கூடு இராணுவச் சீருடையுடன் மீட்கப்பட்டது.

பின்னர் இவ்விடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு காவல் பணிமனையினர் பார்வையிட்டதுடன் எலும்புக்கூடுகளை பணிமனைக்குக் கொண்டுசென்றனர்.(ச)


# பதவிவெற்றிடம்

↕பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

யாழ். நகரப் பகுதியிலிருந்து 10 கி.மீ. தூரத்துக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதி உடையவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

*வலம்புரி* நிர்வாக உத்தியோகத்தர்
*இல.15 வெள்ளாந்தெரு,*
*யாழ்ப்பாணம்.*



# பாராட்டுகின்றோம்

வசந்தபுரம் இளவாலையைச் சேர்ந்த
**சுதாகரன் – யூஜின் ஜெனிற்ரா**
தம்பதிகளின் செல்வப் புதல்வியும்
யாழ்.இளவாலை மெய்கண்டான்
மகாவித்தியாலய மாணவியுமாகிய

**செல்வி சுவேதிகா**
**(திவ்வியா)**



அவர்கள் 2004 தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு அவரை மனமார வாழ்த்துவதுடன், அவர் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு, அவர் சித்தியடைய ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் காந்தி கல்வி நிலைய ஆசிரியர் திரு. S. சுதன் ஆகியோரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

**பாராட்டுபவர்கள்:** அப்பா, அம்மா, அக்கா (வித்தியா), தம்பிமார் (சுவீஸ்ரன், சுவேதிகன்)

(C-611)


## அத்துமீறி...

செய்த நீதிவான் 5படகோட்டிகளையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 15 மீனவர்களையும் இந்திய கடலோரக் காவற்படையினரிடம் ஒப்படைக்குமாறு இலங்கை கடற்படையினருக்கு உத்தரவிடப்பட்டது.

விடுவிக்கப்பட்ட 15 இந்திய மீனவர்களும் நேற்றுவரை தலைமன்னார் கடற்படையினரின் பாதுகாப்பிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு சிறைச்சாலையில் பாதுகாப்பை கருத்திற் கொண்டு 5 படகோட்டிகளும் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ச-8)

## புலிகள் ...

துவது, அப்பகுதியிலுள்ள விவசாயக் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதுபோன்ற விவரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் அச்சமின்றி தமது இடங்களில் வாழ்வதற்கு பொலிஸாருடன் விடுதலைப் புலிகள் இணைந்து செயற்படுவர் எனவும் இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(ச)






இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.